# நாடார்குல மித்திரன்

# THE NADAR KULA MITRAN.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று

வெளிவரும்,

## மாதம் மும்முறைப் பதிப்பு.

நாடார்குல மித்திரன் சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்குரூ3-8-0.

சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

நாடார்குல மித்திரன். விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.

சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-4-0

நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

சுதந்தரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

பத்திராதிபர், சூ. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

மலர் 4. ] துந்துபி௵ புரட்டாசி௴ 25௳ புதன் கிழமை (அருப்புக்கோட்டை) 1922௵ அக்டோபர்௴ 11௳ [ இதழ் 5


## சௌந்தரகாந்தி.

இது ஒரு

புதிய நாவல்! இனிய நாவல்!!

மதியைவிளக்கி மகிழ்ச்சியைத் தரும் நாவல்!!!

[இஃது திருமலையப்பபுரம், பா. பி. இரத்தினபாண்டிய ரவர்களால் எழுதப்பெற்றது.]

பாண்டிய பரம்பரையைப்பற்றியும். பாண்டிய மன்னர்களின் ஆட்சி முறையைப்பற்றியும் தெளிவாய் நாவல்ரூபமாய், சொற்சுவைபொருட்சுவையோடுமுதல்முதல் வெளிவந்த தமிழ் நாவல்இதுவே. கற்றோரும், மற்றோரும் கவிந்து கொண்டாடப்பெற்றது ஆண், பெண் இருபாலருக்கும் அருமையான பெருமையைத்தரும் பேர்பெற்றது. படிக்க புத்தியையும், பார்க்க வித்தையையும் தரும் சக்திபெற்றது. ஆசிரியர் படத்தோடும் கூடியது.

இதன் விலை அணா 12, தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

நாடார்குலமித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை.

---

## ஜீவரத்னம்

ஜ்வரங்கள், இருமல், கபம், காஸம், க்ஷயம், ஆஸ்த்மா, குன்மம், அஜீரணம், வயிற்றுவலி, மந்தம், காலரா, பிளேக், தேகத்திலுண்டாகும் பலவித நோய்கள், தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, ஜலதோஷம், மார்சளி, பல் வியாதிகள், காதுவலி. இன்னும் இதர வியாதிகளையும் அதிசீக்கிரத்தில் குணப்படுத்தும்.

புட்டி ஒன்றுக்கு விலை ரூ 2—0—0.

தபால் சார்ஜ் பிரத்யேகம்.

குறிப்பு:-ஏஜண்டுகள் தேவை. வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

விலாசம்:-
ஜீவரத்னம் கம்பெனி,
நெ 6. சேலம்,
(தென் இந்தியா)

## மாயாவி.

மந்திர, தந்திர, இரகசியங்கள், ஜால வேடிக்கைகள், சீட்டுக்கட்டு தமாஷ்கள், கைத்தொழில்கள் (மெஸ்மரிஸம்) மனோவசிய உண்மைகள் முதலிய இரகசியங்களை வெளிப்படுத்தும் அற்புதமான ஓர் மாதாந்தர தமிழ்ச் சஞ்சிகை.

இதன் வருடச்சந்தா ரூபா 3 8 0
வெளிநாடுகளுக்கு ரூபா 4 0 0
தனிப்பிரதி அணா 6.

மானேஜர், மாயாவி ஆபீஸ்,
புதுக்கோட்டை

---

## விஜயவிகடன்.

மாதம் நான்குமுறை

1922௵ ஜூலை௴ 15௳ முதல் பிரசுரமாகும்

பழையபடி முன் கையொப்ப நேயர்கள் பலர் வேண்டுகோளால் முன்னாடத்தியிருந்த உபபத்திராதிபர்களாலும், மானேஜராலும் கவர்ன்மெண்டு அனுமதியின் மேல் ஆரம்பிக்கலாயிற்று.

இதில் நானாவிதமான விநோத விகட வியாசங்களும், விகடகவிகள், விகட நாவல்கள், விகட விடுகதைகள், விகடகோர்ட்டுகள் ஏண்டு விகடங்கள், முதலியவைகள் எளிய தமிழ்நடையில் வெளியாகும்.

இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூபா 4 8 0 வெளிநாடுகளுக்கு ரூபா 5 0 0

விஜய விகடன் ஆபீஸ், போஸ்ட் பாக்ஸ் நெ. 560.
வண்ணாரப்பேட்டை போஸ்டு, மதராஸ்.

---

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!!

அநுபோக

## "கைத்தொழில் போதினி."

என்னும் அருமையான கைத்தொழில் சாஸ்திரம் வெளியாகி விட்டது. இதிலடங்கிய அனேக இரகசிய முறைகளைக் கொண்டு, ஏழைகளனைவரும் முன்பணம் அதிகச் செலவில்லாமலும், பிரயாஷை இல்லாமலும், நிறையபணம் சம்பாதிக்கலாம் சுயேச்சியாய் சுகஜீவனம் செய்யவிரும்பும் ஒவ்வொருவருக்கும் தக்கசமயம் இதுவே என்பதை மறந்து விடாதீர்கள். காப்பி 1-க்கு விலை ரூபாய் 1. வி. பி. செலவு அணா 5. (முன்பணம் அனுப்புவோருக்கு தபால் சார்ஜ் இனாம்.

K. N. S. & Co.,
ARIMALAM.

---

## இனாம்! இனாம்!!

செல்வ ரஸக்கீர்த்தனை இனாம்!

5-வது கான்பரன்ஸ் ரிபோர்ட் இனாம்!

நாடார்குல மித்திரன் மாதம் மும்முறைப் பதிப்பு.

நமது மித்திரனுக்கு புதிய இரண்டு சந்தாதார்களைச் சேர்த்துக்கொடுத்து முன்பணமாக அனுப்பச் செய்கிறவர்களுக்கு, மீநாடு தண்டுப்பத்து ஸ்ரீமான் செ. செல்லத்துரை என்ற ஆறுமுகப் பெருமாள் நாடாரவர்கள் இயற்றிய செல்வரசக்கீர்த்தனை இனாமாக அனுப்பப்படும். இதில் பலவர்ணமெட்டுகளாலான கீர்த்தனைகளும், மற்றபாட்டுகளும் அடங்கிருக்கிறது. 3 அணாவிலைமதிப்புள்ளது. பழைய சந்தாதார்கள் தங்கள் 4-வது வருடத்துசந்தாத்தொகைரூ 3-8-0யைநவம்பர்௴ 30௳ க்குள் அனுப்புவார்களானால் நாடார்குலத்தவர்களின் முக்கிய வாசஸ்தலங்களில் ஒன்றாகிய விருதுபட்டியில் கூடிய 5-வது கான்பரன்ஸ் ரிபோர்ட்டு இனாமாக அனுப்பப்படும். இது உயர்ந்த டிம்மியில் பதிப்பிக்கப்பட்டது. இதில் 5-வது கான்பரன்ஸுக்கு விஜயஞ்செய்த ஒவ்வொருவருடைய பெயர்முதலிய முழு நடபடிக்கைகளின் விபரமும், செலவு கணக்கும், மற்றவர்களுடைய அரிய உபந்நியாசங்களும் அடங்கியிருக்கிறது.

நாடார்குல மித்திரன் ஆபீஸ், அருப்புக்கோட்டை.

---

## அமரர் புராணம்.

ஒப்புயர் குலாபிமானியாய் ஸர்க்காரில் உயர்ந்த உத்தியோகம் வகித்துக் காலஞ் சென்ற மேதாவி G. S. கொர்நேலியூஸ் நாடார் அவர்கள் இயற்றிய அரிய நூல். சான்றோர் குலப் பெருமையை வெகு தெளிவாக எடுத்து விளக்கிக் காட்டுவது. இதன் அருமை பெருமைகளைப் பாராட்டாதவர் ஒருவரும் இல்லை. 500 பக்கம் கொண்ட பெரிய புஸ்தகம் சில பிரதிகளே கையிருப்பு. விலை ரூ 2—8—0 தபால் செலவு பிரத்தியேகம்.

விலாசம்.—
ஸ்ரீமதி பூரணம் கொர்நேலியூஸ் அம்மாள்,
நாசரேத்து P. O. திருநெல்வேலி ஜில்லா.


Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

# கவுன்ஸில் மீட்டிங்கு.

மதுரை செப்டம்பர்௴ 5௳

துந்துபி வருஷம் ஆவணி மாதம் 20௳ (5-9-22) செவ்வாய்க்கிழமை நாடார் மஹாஜன சங்கம் ஆபீஸில் நடைபெற்ற கவுன்ஸில் மீட்டிங்கில் விருதுபட்டி ஸ்ரீமான் மு. ச. பெ. செந்திக்குமார் நாடார் முனிசிபல் சேர்மன் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

1. ஏப்பிரல் மாதம் முதல் ஜூன் மாதம் முடிய செய்த வேலைகளையும் வரவு செலவுகளையும் பற்றி காரியதரிசிகள் செய்த ரிப்போர்ட்டு கவனிக்கப்பட்டது.

2. கீழ்கண்ட மெம்பர்கள் கவுன்ஸில் மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

1. ஸ்ரீமான் சி. த. தவஸிப்பெருமாள் நாடார் அவர்கள் கடம்பூர், 2. ஸ்ரீமான் மீ. சி. சுந்தர நாடார் அவர்கள் திருமலாபுரம். 3. ஸ்ரீமான் மு. வீ. முத்தைய நாடார் அவர்கள் இராமநாதபுரம். 4. ஸ்ரீமான் தி. கந்தஸாமி நாடார் அவர்கள் பச்சையாபுரம். 5. ஸ்ரீமான் K சாமிமலைய நாடார் அவர்கள் வேப்பலோடை. 6. ஸ்ரீமான் வெ. பொன்னப்பநாடார் அவர்கள் உசிலம்பட்டி. 7. ஸ்ரீமான் வ. கருப்பண நாடார் அவர்கள் சந்தையூர். 8 ஸ்ரீமான் V. K. பாலசுப்பிரமண்ய நாடார் அவர்கள் வையூர்மீனாக்ஷிபுரம். 9. ஸ்ரீமான் தொ. ச. சதுரைச்சாமி நாடார் அவர்கள் விருதுபட்டி. 10. ஸ்ரீமான் கு. மாரியப்ப நாடார் அவர்கள் எட்டயாபுரம்.

3விருதுபட்டி ஸ்ரீமான் K P சங்காலிங்கநாடாரவர்கள் தான் பம்பாய்க்குப் போகிறதினிமித்தம் கவுன்ஸில் அங்கத்தினர் பதவியினின்று விலகிக்கொள்வதாக எழுதிய லெட்டர் வாசிக்கப்பட்டு அவருடைய ராஜிநாமாவை அங்கீகரித்து அவருக்குப் பதிலாக நாகர்குடி ஸ்ரீமான் அரி. அ. சு. ஆறுமுகச்சாமி நாடார் அவர்களை கவுன்ஸில் மெம்பராக நியமிக்கலாயிற்று.

4 ஜெனரல் மீட்டிங்கில் கவுன்ஸில் மெம்பராக தெரிந்தெடுக்கப்பட்ட அருப்புக்கோட்டை ஸ்ரீமான் ரூ. ஆ. முத்துநாடார் அவர்கள் ஸ்பெஷல் மெம்பராக இருப்பதால் அவருக்குப்பதில் மதுரை ஸ்ரீமான் V. A. கந்தநாடார் B. A., B. L. அவர்களை கவுன்ஸில் மெம்பராக நியமிக்கலாயிற்று.

5. (a) 1921-ம் வருஷத்திய கணக்கை ஆடிட் செய்ய நியமித்த மெம்பர்கள் இதுவரை ஆடிட் ரிப்போர்ட்டு அனுப்பாததால் அவர்களை நீக்கி கீழ்கண்ட மெம்பர்கள் ஆடிட்டராக நியமிக்கப்பட்டார்கள். 1. ஸ்ரீமான் கூ. மு. அ, வ. பழனியப்ப நாடார் அவர்கள் மதுரை. 2. V. A. கந்தநாடார் அவர்கள் B. A., B. L. மதுரை. 3. K. S. அருணகிரி நாடார் அவர்கள் மதுரை. (b) இவர்கள் ஒருமாதத்திற்குள் ஆடிட் ரிப்போர்ட்டை அனுப்பவேணுமாய்க்கேட்டுக் கொண்டபடி ஒப்புக்கொண்டார்கள்.

6. தூத்துக்குடியில் நடந்த சங்கத்தின் 6-வது கான்பரன்ஸ் வரவு செலவுகணக்குஷ்டியூர் ம-া-ஸ்ரீ பா. பி. குமாரவேல் நாடார் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது. அதில் உபசரணைக் கமிட்டி செக்ரட்டேரி சேர்மன் கையெழுத்து இல்லாதபடியால் கவுன்ஸில் ஒப்புக்கொள்ளாமல் ஜெனரல் செக்ரட்டேரி அல்லது சேர்மன் கையெழுத்துக்காக திருப்பி அனுப்ப கவுன்ஸிலில் தீர்மானிக்கப்பட்டது.

7. சிவகாசியில் நடந்த சங்கத்தின் 8-வது கான்பரன்ஸ் கணக்குகளை ஷை கமிட்டி மெம்பர்கள் கவுன்ஸிலில் ஆஜர்படுத்தாதபடியால் கணக்கு அனுப்பும்படி கான்பரன்ஸில் ஏற்படுத்திய கமிட்டிக்கு லெட்டர் எழுத கவுன்ஸில் தீர்மானிக்கிறது.

8. தூத்துக்குடியில் கூடிய 6-வது கான்பரன்ஸில் பிரசாரவேலைக்கு ஒப்புக் கொண்டு தலைக்கட்டு வரி ரசீதுப் புஸ்தகம் பெற்றுக்கொண்டவர்களில் இன்னும் தங்கள் கணக்குகளை கொடுக்காதவர்களிடமிருந்து மீதப்புஸ்தகங்களையும் அவர்களால் வசூலிக்கப்பட்ட தொகைகளையும் வரப்பற்ற செக்ரட்டேரிகளுக்கு அதிகாரம் கொடுக்கிறது.

9 சம்பளத்தின் பேரில் இன்னும் மூன்று பிரசாரகர்களை சங்கத்துக்கு நியமுகம் செய்ய செக்ரட்டேரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

10. சங்கம் மானேஜர் ஸ்ரீமான் A. பொன்னையாநாடார் B. A அவர்கள் ராஜிநாமாலெட்டர் வாசிக்கப்பட்டது. அவருக்குக் கொடுக்க வேண்டிய அலவுன்ஸ் ரூ 450 ம் கொடுத்துவிடுகிறதென்றும் ஆகஸ்டு௴ 1௳ முதல் ஷையார் அலவுன்ஸ் இல்லாமல் ஹானரேரி மானேஜராக இருக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

11. முக்கூடல் நாடார்கள் எழுதியலெட்டர்கள் வாசிக்கப்பட்டன. முக்கூடலில் போதுமான இடவசதியில்லை என்பதாகத் தெரிவதால் ஷையூரில் கான்பரன்ஸ் நடத்துவது உசிதமில்லை என கவுன்ஸில் தீர்மானிக்கிறது.

12. வடுகபட்டி, தேனி, திருமலாபுரம், காமாக்ஷிபுரம், சின்னமனூர், சுக்காங்கல்பட்டி இந்த ஊர்களிலுள்ள ஒற்றுமைக் குறைவை தீர்த்து மகமை சீர்திருத்தம் செய்யஒரு கமிட்டி நியமிக்கும்படி மனுக்கொடுத்துக் கொண்ட திருமலாபுரம், மகா-ா-ா-ஸ்ரீ மீ. சி. சுந்தர நாடார் அவர்கள் இந்தக் கவுன்ஸில் மீட்டிங்கில் ஆஜரில்லாதபடியால் அடுத்த மீட்டிங்கில் ஷையார் அனுப்பிய மனு கவனிக்கப்படுமென கவுன்ஸில் தீர்மானிக்கிறது.

13. கோணம்பட்டி உறவின்முறை நாடார்களிடமிருந்து வந்த மனு வாசிக்கப்பட்டு ஷையூர் சரஸ்வதி பாடசாலை அபிவிருத்திக்காக ரூ 25 சாங்ஷன்செய்யப்பட்டது.

14. சிவஞானபுரம் மகா-ா-ா-ஸ்ரீ சி. அ. தி, வடிவேல்முருக நாடார் அவர்களிடமிருந்து வந்த மனு வாசிக்கப்பட்டு ஷையூர் நாடார் ஹிந்து எலிமெண்டரிஸ்கூல் அபிவிருத்திக்காக ரூ 25 சாங்ஷன் செய்யப்பட்டது.

15. கன்னிராஜபுரம் உறவின்முறை நாடார்களிடமிருந்து வந்த மனு வாசிக்கப்பட்டு ஷை மனுவில் சொல்லும் விஷயம் கோர்ட்டு விவகாரமாயிருப்பதால் கவுன்ஸிலில் ஆலோசிக்க இடமில்லை யென கவுன்ஸில் தீர்மானிக்கிறது.

16. சங்கம் ஆபீசுக்கு ஷெட்டுளார்க்கு ஒருவரை மாதம் 1-க்கு சம்பளம் ரூ 100-க்கு மேல்படாமல் நியமுகம் செய்ய காரியதரிசிகளுக்கு கவுன்ஸில் அதிகாரம் கொடுக்கிறது.

17. சங்கம் பிரஸிடெண்டு ஸ்ரீமான் V பாலகுருசாமி நாடார் அவர்கள் கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாய் அனுப்பியுள்ள மெமோரூண்டம் ஆப் அசோஸியேஷனும் இலங்கை ஐயேலாவிலிருந்து மிஸ்டர் R. C. தேவவரம் அவர்கள் கைத்தொழில் விஷயமாய் ஸ்ரீமான் Rabbi B. J. M. குலசேகரராஜ் அவர்கள் மூலம் அனுப்பியுள்ள லெட்டர்களும் கூலியங்கரிசல் ஸ்ரீமான் மு. தெ. சின்னைய நாடார் அவர்கள் எழுதிய லெட்டரும் வாசிக்கலாயின. இது விஷயமாய் நம் ஜனசமூகம் தகுந்த சிரத்தை எடுக்கவேண்டுமென்பதாக கவுன்ஸில் தீர்மானிக்கிறது.

18. நாங்குநேரித் தாலூகா, பணக்குடி ஸ்ரீமான் சா முத்தைய நாடார் வகையறாக்களிடமிருந்து ஷையூர் யூனியன் எலக்ஷன் விஷயமாய் வந்த மனு வாசிக்கப்பட்டது. ஷை மனு விஷயமாய் சட்டசபையில் வேண்டும் நடபடிக்கைகள் நடத்த ஸ்ரீமான் W P A சௌந்தரபாண்டிய நாடார் M. L. C. அவர்களுக்கு அதை அனுப்பக் கவுன்ஸில் தீர்மானிக்கிறது,

19. மகா-ா-ா-ஸ்ரீ Rabbi B. J. M. குலசேகரராஜ் அவர்கள் சென்ஸஸ் விஷயமாய் மதராஸ் போய் வந்ததில் 5-9-22 தேதியுள்ள ரூ 32-11-9 பில் 1-ம் 5-9-22 தேதியுள்ள ரூ 347 13 3 பில் 1-ம் 5-9-22 தேதியுள்ள ரூ 27-4-0 பில் 1-ம் ஆகபில்கள் மூன்றையும் கவுன்ஸிலில்படித்துப்பார்த்து அவைகளுக்கு சர்வடக்கம் ரூ 125 கொடுக்க வேணுமாய் தீர்மானிக்கப்பட்டது.

* * *

## மாப்பிள்ளைக்குப் பரிசம்.

மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷர் (The Lord Bishop of Dornakal) கனம் வேதக்கண் சாமுவேல் நாடார் அவர்கள் தமிழ்ச் சபைத் தீபிகையில் பின் வருமாறு எழுதுகிறார். )

(முன் தொடர்ச்சி)

1 பெண்கள் செய்யக்கூடியது. இத்தீமையைச் சீக்கிரமாய் நிவர்த்திக்கக் கூடியவர்கள் பெண்களே முதலாவது சுயாதீனமாய்ப் பிழைக்கும்படி படியுங்கள் கிறிஸ்தவ ஸ்திரீகள் சமது நாட்டில் தற்காலத்தில் செய்யக்கூடிய வேலைக்கு மட்டில்லை. பெண்கள் பாடசாலைகளுக்கு உபாத்திச்சிமார் தேசமெங்கும் தேவை. வைத்தியம் கற்றுக்கொண்ட பெண்களுக்கு எங்கும் நல்லவேலை கிடைக்கக்கூடும் மெற்றிரிக்குலேஷன் வரை கற்றுக்கொண்டவர்கள், அல்லது மத்திய பரீக்ஷை (S. S. L. C or Intermediate) தேறினபெண்கள் வெகு சுலுவாய் வைத்திய கல்லூரியில் சேரக்கூடும். பெண்களே! கல்வி கற்றுக் கொள்ளுங்கள். பெற்றோராவது, புருஷராவது தேடும் சம்பாத்தியத் திலல் பிழைக்கலாம் என்று எண்ணுதிருங்கள்!

இரண்டாவது, விவாகம் உங்கள் முழு நோக்கமாய் இராதிருப்பதாக. பள்ளிக்கூடம் விட்டு, சும்மா வீட்டில் வந்திருப்பீர்களானால் உங்கள் பெற்றோர் உங்களை யாரோ ஒருவருக்குக் கட்டவேண்டுமென்கிறார்கள், கவலைப்படுகிறார்கள். அதற்காகக் கடன் படுகிறார்கள், பொய் சொல்லுகிறார்கள். இதற்கு நீங்களல்லவா காரணம்? சீக்கிரம் விவாகம் செய்துகொடுக்காவிட்டால் தியாமல் கெட்ட குணத்தைக் காட்டும் பிள்ளைகளும் உண்டு. இத்துன்பம் ஆற்றாமல், பணத்தையாவது கட்டிப் பெற்றோர் உங்களைத் தள்ளிவிடுகிறார்கள். தேசத்துக்கு நன்மையாக ஓர் தொழிலைக் கற்றுக்கொண்டு ஒருவருக்கும் பாரமாயிராதிருப்பீர்களானால், விவாகம் வந்தாலும்சரி, வராவிட்டாலும் சரி, என்றிருக்கக்கூடுமே. அப்பொழுது தேசத்துக்கும் உங்கள் பெற்றோருக்கும் உங்களால் எவ்வளவு மேன்மை யுண்டாகக் கூடும்!

மூன்றாவது, உங்கள் பெற்றோரிடத்தில் பணங் கேட்கும் மாப்பிள்ளையை விவாகம் செய்யமாட்டோம் என்று தீர்மானம் பண்ணிக் கொள்ளுங்கள். உங்களைப் பெற்று வளர்த்த அருமைப் பெற்றோரைத் தரித்திரராக்குகிறவன் என்ன குணக்காரனாயிருப்பான்? உங்களால் வரும் பணத்துக்காக உங்களை விவாகஞ் செய்கிறவன் உங்களை எப்படி நேசிப்பான்? அப்படிப்பட்ட வீட்டில் துன்பமே உங்களுக்கு முன் நிற்கும். நீங்கள் மாத்திரம் இது விஷயத்தில் ஒரே பிடிவாதமாக நிற்பீர்களானால், ஒருவரும் உங்களுக்குப் பணம் கேட்கத் துணியார்கள். இவ்வளவு கண்டிப்பு உங்களிடமில்லாததினால் மாப்பிள்ளைகள் படிப்புக்காக வெட்கமின்றிக் கடன்படவும், அவர்கள் பெற்றோர் மரியாதையற்றுப் பணம் கேட்கவும், தேசத்தில் புருஷர் குணம் பணப் பிசாசினால் சீர்கெட்டுப்போகவும் வழியுண்டாகிறது. இவ்வித சீர்திருத்த சங்கம் ஒன்றை உண்டாக்கி அங்கங்கே இருக்கும் பெண்களுக்கு இதைப் புகட்டி, எல்லாரையும் இதற்கு அங்கங்களாக்கும்படி வேலை செய்யும் காலேஜ் மாணாக்கிகள் தேசத்துக்குப் பெரிய நன்மை செய்கிறவர்களாவார்கள்.

2 மாப்பிள்ளைகள் செய்யக்கூடியது. கல்வி கற்றவரும் வாலிபரும் மனம் வைத்தால் இதைச் சீக்கிரம் நிவர்த்திசெய்யக்கூடும். முதலாவது, பெண் வீட்டாருக்காவது, பெண்ணுக்காவது, கடன்படுப்படிப்பது அவமானம் என்று எண்ணுங்கள். கடன் அடிமைத்தனம். ஆகிலும் உங்கள் கல்வியினிமித்தம் கடன்படுவது அவசியமானால், உத்தியோகம் பார்த்து அக்கடனைத் தீர்க்கு முன் விவாகஞ் செய்வது மதியீனம். பெண்வீட்டாரின் பணத்தை வாங்கி நீங்கள் கடன் தீர்ப்பீர்களானால், உங்களை உங்கள் மாமனுருக்கு விற்றுப்போட்டீர்களென்று எண்ணுங்கள்! அவரிடத்திலிருந்தாவது, நீங்கள் விவாகஞ் செய்யுமிடத்திலிருந்தாவது, உங்களுக்கு என்ன மதிப்பு? காலேஜிலிருக்கும் காலத்தில் சுயாதீனத்தைப் பற்றியும் கற்றுக்கொள்ளுகிற நீங்கள் இவ்விஷயத்தில் அறிவிலலாமற் போவதென்ன?

இரண்டாவது, சீக்கிரம் விவாகம் பண்ணவேண்டுமென்கிற எண்ணத்தையும் விட்டு விடுங்கள். பரீக்ஷைகளை முடித்து, உத்தியோகம் பார்த்து, கடன் உண்டானால் அதையும் தீர்த்து, கலியாணச் செலவுக்கும் கையில் பணம் வைத்துக்கொண்டு விவாகத்தைப் பற்றி நினையுங்கள். அப்படிச் செய்வீர்களானால், பக்தி, குணம், குடும்பம் முதலியவற்றை ஆறஅமரக் கவனித்து, கர்த்தர் உங்களுக்குத் தரப் போகும் பிள்ளைகளுக்கு எப்படிப்பட்ட தாய் வேண்டுமோ அதை யோசித்து, உங்கள் மனதிற்கேற்ற பெண்ணைப் பார்க்கலாம். பணம் உங்கள் கையிலில்லாததால் கல்விக் கடனுக்கும் கலியாணத்துக்கும், தாலிக்கும் உடைக்கும் பணத்தைக் கொடுப்போம் என்று வருகிறவர்கள் யாரோ, அவர்கள் வீட்டில், பெண் எப்படிப்பட்ட பெண்ணாயிருந்த போதிலும் சரி. அப்பெண்ணை எடுக்கிறீர்கள். ஆத்திரக் காரனுக்கு புத்திமட்டு.

மூன்றாவது, யாராவது தங்கள் பிள்ளைகளுக்காகப் பணம் கொடுப்போம் என்று வந்தால், அப்படிப்பட்ட வீட்டில் விவாகஞ்செய்யமாட்டோமென்று தீர்மானம் பண்ணுங்கள். பெண்ணில் ஏதோ குறை இருக்கிறதினால்தான் பணங் கொடுத்து உங்கள் கண்ணில் மண் போடப் பார்க்கிறார்கள் என்று நினையுங்கள். மாப்பிள்ளை வீட்டுக்காரர் தங்களுக்கு இஷ்டமான பெண்ணுக்காகக் கேட்கவேண்டியது நியாயமே தவிர, பெண் வீட்டுக்காரர் மாப்பிள்ளைக்காகக் கேட்பது முறைகேடு. இவ்வித முறைகேடான காரியத்தைச் செய்கிறவர்களுடைய பெண் என்னத்திற்காகும்? அக்குடும்பம் என்னத்திற்காகும்? பணம் கொடுப்போம் என்று சொல்லுகிறவர்கள் வீட்டில் விவாகஞ் செய்யமாட்டோமென்று தீர்மானம் பண்ணிச் சாதிக்கும் வாலிபர் சங்கம் ஒன்று வேண்டும். காலேஜ் மாணக்கர் எழும்பி இதை ஆரம்பிக்க மாட்டார்களா?

இன்னும் வரும்.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# இந்தியச் செய்திகள்.

### பிராமணரல்லாதாரின் வெற்றி.

1922-வருஷம் ஆகஸ்டுமீ நடந்த சென்னை சட்டசபையின் கூட்டத்தில் பிராமணரல்லாதார்கள் கவர்ன்மெண்டு உத்தியோகங்களிலிருந்து வரும் விதாச் சாரத்தை உயர்த்துவதற்காக செய்யப்பட்ட தீர்மானத்தை 1921வூ செப்டம்பர்மீ 16உ அமுலுக்குக் கொண்டு வரும் விஷயமாக வெளியிடப்பட்ட உத்தரவில் ஒவ்வொரு அரை வருஷத்திலும் காலமான உத்தியோகங்களில் நியமிக்கப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கையைக் காட்டக் கூடிய விபரங்களை 6 தலைப்பின் கீழ் காட்டும்படி கவர்ன்மெண்டார் குறிப்பிட்டிருந்தனர். அதன் டிசம்பர் மாதம் 31உ யோடு முடிவான அரைவருஷத்தில் 100-க்கு 22 உத்தியோகங்கள் விதம் பிராமணர்களுக்கும் 48 உத்தியோகங்கள் விதம் பிராமணரல்லாத ஹிந்துக்களுக்கும், 10 உத்தியோகங்கள் விதம் கிறிஸ்தவர்களுக்கும் 15 உத்தியோகங்கள் விதம் முகம்மதியர்களுக்கும், 2 உத்தியோகங்கள் விதம் ஐரோப்பியர்களுக்கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கும், 3 உத்தியோகங்கள் விதம் இதரர்களுக்கும், கொடுக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

* * *

1921-22 – ம்வருஷத்தில் விளம்பர சபைக்கு சிப்பந்திகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 3837-12-0 ம் மற்ற இனங்களில் மாதம் 1 க்கு ரூ 4398-5-0 ம் செலவாகிறது.

* * *

1921 ம் வருஷத்தில் இந்தியாவில் சுமார் ஒருகோடியே 11 லக்ஷம் குரோஸ் தீப்பெட்டிகள் இறக்குமதி செய்திருக்கிறது.

* * *

சென்ற வருஷம் ஆகஸ்டுமீ முதல் சட்டசபை தீர்மானத்தின்படி கிராமமுனிசிப்புகளுக்குச் சம்பளம் ரூ 15 ஆக உயர்ந்திருக்கிறது.

* * *

### ஜெர்மனியில் இந்தியருக்கு கல்வி வசதிகள்.

இவ்விடத்திற்கு வரவிரும்புவோர் தங்களுடைய படிப்பு, யோக்கியதை ஆகிய வற்றைக் குறித்து யோக்கியதாப் பத்திரம் அவசியம் வாங்கிக் கொண்டு இந்தியா, பிரான்ஸ் இத்தலியிலுள்ள ஜெர்மன் ஸ்தானீகர்கள் யாரிடத்திலேனும் சீட்டுவாங்கிக் கொண்டு நேராக வந்து விடலாம். புதிதாக வருபவர்களுக்கு சகல வசதிகளும் உண்டு, இங்கிலாந்தில் செலவாகும் மூன்றில் ஒரு பங்கு செலவழித்தால் இவ்விடத்திற்குப்போதும் அதாவதுவருடத்திற்கு 100 பவுன் போதும் என்று பர்லின் நகரத்திலுள்ள இந்திய சபையார் அறிவிக்கிறார்கள்.

* * *

### பிலிப்பையின் தீவு.

அமெரிக்காவின் ஆதிக்கத்திலிருந்து வரும் பிலிப்பையின் தீவு வாசிகள் பூரண சுய ஆட்சிக்கு பக்குவமடைந்து விட்டார்களா வென்று பார்த்து வரும்படியாக அமெரிக்காவிலிருந்து வந்த ஜெனரல் லியோனார்ட்வுட் என்பவரும் கவர்னர் ஜெனரல் கனம் காமிகன்போப்ஸ் என்பவரும் தமது விசாரணையின் முடிவில் பிலிப்பையின் கிறிஸ்தவர்கள் ஒருமனதாய் சுயேச்சைக்கு ஆசைப்படுகிறார்களென்றும், ஆனால், அமெரிக்காவின் ராணுவகடற்படை பலத்தின் உதவியைக் கொண்டு சுயேச்சையாக வாழ்வதையே விரும்புவதாகவும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இக்கமிஷனர்களின்ஸ்டேட் மெண்டைக்கொண்டு அமெரிக்க ஜனாதிபதி கனம் ஹார்டிங்கும் பிலிப்பையின் இன்னும் சுயேட்சைக்கான பக்குவமடையவில்லை யென்று ஜனங்களின் அபேக்ஷைக்கு மருதளித்து விட்டார். ஆசையால் பிலிப்பையின் வாசிகள் ஒத்துழையாமையை அனுஷ்டிக்கப் போவதாகத் தெரிகிறது.

* * *

### வியாசப் பரிசளிப்பு

இந்தியாவில் ஆடு மாடுகளைக் கொலைசெய்வதை எவ்வாறு அனுபவத்தில் நிறுத்துவது என்ற விஷயமாக நல்லவியாச மெழுதுகிறவர்களில் இருவருக்கு ரூ 150 ரூ 100 கல்கத்தா பசுசம்ரக்ஷண சங்கத்தார் பரிசுகள் அளிப்பார்கள் என்றும் இந்தியாவிலுள்ள எவரும் டிசம்பர்மீ 13ந்தேதிக்குள் கல்கத்தா நெ 171 ஏ ஹாரிஸன் ரஸ்தாவிலுள்ளமேல் கூறிய சங்கக் காரியதரிசிக்கு வியாசம் யெழுதி அனுப்பலா மென்று அறிவிக்கப்படுகிறது.

* * *

### கௌரவப்பட்ட விற்பனை.

லார்டு சபையில் கௌரவப்பட்டங்களைப் பற்றி விவாதம் நடந்தபோது பட்டங்களை விற்கப்பட்டதாக பிரஸ்தாபிக்கப் பட்டதை அலசிப்பார்க்கும் போது உண்மையில் ஒரு பிரபுவுக்கு அம்மாதிரியே ஒருபட்டம் விலைக்கு வாங்கிக்கொடுக்கப்பட்டதென்றும் 40 ஆயிரம் பவுனுக்கு பாரன் என்னும் பட்டம் கிடைக்கு மென்றும் தெரியவருகிறது. எங்கும் சொர்ணமயமாயிருக்கும் இங்கிலாந்திலேயே அவ்விதம் பணப் பேய் தலைவிரித்தாடுகிறதாயின் பொருளாதார நிலைமைகுன்றியிருக்கும் நம் நாட்டில், அளவிடற்பாலதோ! ஐயோ, வயிற்றுச் சோற்றுக்கு வெறும்வாயை மெல்லும ஏழைமக்களுக்கிறங்குவா ரில்லையே!

* * *

### விசேஷப் பிரசவம்.

திருவாங்கூர் சேர்த்தலைக்கடுத்த மருத்தோர் வட்டத்தில் ஓர் ஈழவப்பெண் பிரசவித்த குழந்தைகளுக்குத் தலையும் கைகளு மின்றி மற்ற அங்கங்களுக்குப் பதிலாக ஒருவால் மட்டு மிருந்ததாகவும் குழந்தை இறந்து போனதாகவும் தெரிகிறது, உடலுக்கும், கால்களுக்கும் பதிலாக மச்சத்தைப் போன்ற ஒருவால் மட்டு மிருந்ததாம்.

* * *

### ஸ்திரிக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன:

பவநகரைச் சேர்ந்த கசா என்னும் ஓர் கிராமத்திலுள்ள குபவர் வகுப்பு ஸ்திரீ ஒருத்தி ஒரே சமயத்தில் 4 குழந்தைகளை ஈன்றனள் அதில் இரண்டு குழந்தைகள் ஒன்றாகச் சேர்ந்திருந்தன. அவைகளின் தலையும், கால்களும் வெவ்வேறாக இருந்தபோதிலும் கை கால் மாத்திரம் இரண்டே இருந்தன இவ்வபூர்வ குழந்தைகள் இறந்து விட்டன. மற்ற இரண்டு குழந்தைகளும் ஜீவித்திருக்கின்றன; இதனால் இக்குழந்தைகளைப் பெற்ற தாய் உடனே உயிர் துறந்தாள்,

* * *

### ஆகாய விமானம் இனாம்.

தற்சமயம் துருக்கிக்கும், கிரீஸுக்கும் நடந்து வரும் சண்டையில்

## சங்க விஷயங்கள்.

### தேனி க்ஷத்திரியாபி விருத்தி சங்கம்.

நாளது துந்துபிவூ ஆவணிமீ 28உ புதன் கிழமை 5 வது மீட்டிங்கு ஸ்ரீமான் கூ, நா. கூ. கணக்கு சண்முகம் சேர்வை அவர்களின அக்கிராசனத்தின் கீழ் கூட்டப்பட்டது. அவ்வமயம் பல கனவான்கள் விஷயதானம் புரிந்தார்கள்.

நாளது துந்துபிவூ புரட்டாசிமீ 4உ புதன் கிழமை மாலை 9-மணிக்கு சங்கத்தின் 6 வது மீட்டிங்கு ஸ்ரீமான் உ. மா. ரத்தினசாமிநாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூட்டப்பட்டது என்று ஸ்ரீமான் ம. செ. அ. துரைசாமி நாடார் எழுதுகிறார்.

* * *

### க்ஷத்திரிய பால்ய நாடார் சங்கம் மூணார் டவுன்.

இச்சங்கமானது, 19-9-22 யில் இரவு 8 30-மணிக்கு ஸ்ரீமான் V. E. பழனிச்சாமி நாடார் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது என்று காரியதரிசி எழுதுகிறார்.

* * *

### க்ஷத்திரிய நாடார் பால்ய சங்கம் கிருஷ்ணப்பேரி.

இச்சங்கம் துந்துபிவூ ஆவணிமீ 12உ யில் க்ஷத்திரிய நாடார் எலிமெண்டரி பாடசாலையின் கண் சிவகாசி மகா-ா-ா-ஸ்ரீ சி ரு மூக்க நாடாரவர்களும் மகா-ா-ா-ஸ்ரீ பெ ச முத்தைய நாடாரவர்களும் இன்னும் சில குல அபிமானிகளும், அவிடம் வந்து மகமை சேர்திருந்த

---

துருக்கித் தளகர்த்தரான கமால் பாஷா, சின்ன ஆசியாவில் வெற்றியடைந்து கிலாபத்தைக் காக்க முன்நிற்கிறதற்கும், அவர் வெற்றி அடைந்ததற்கு அறிகுறியாக கல்கத்தா வாசிகளான முஸ்லீம்கள், ஒரு ஆகாய விமானம் வாங்கி கமால்பாஷாவுக்கு சன்மானமாகக் கொடுக்கப் போகிறார்களாம்.

* * *

### நூறு ஸ்திரீகள்.

பம்பாயிலுள்ள பிரபல குடும்பத்தைச் சேர்ந்த நூறு மாது சிரோன்மணிகள்மகாத்மா காந்தி பிறந்த நாள் அன்று, மகாத்மா காந்தியை தெரிசிக்கும் பொருட்டு அவரை அடைத்து வைத்திருக்கும் சிறைக்கு யாத்திரையாக வந்தார்கள். ஆனால் அவர்கள் மகாத்மாவை தெரிசிக்க அனுமதிக்கப்பட வில்லை. கடைசியில் இவர்கள் தாங்கள் கொண்டுவந்த பூமாலையையும் பழவர்க்கங்களையும் மகாத்மா ஏற்றுக் கொள்ளுமாறு அனுப்பி வைத்தார்கள். கடைசியில் அவர்களிற் சிலர் அவ்விடத்தை விட்டு பிரியமன மில்லாமல் ஏக்கமிட்டு நின்றார்களாம்: மற்றும் சில ஸ்திரீகள் அன்பின் பெருக்கால் கண்ணீர் விட்டு அழுதார்களாம்: என்னவென்று சொல்லுவது இந்த ஸ்திரீகள் தேசிய ஞானம்பூண்டு தங்கள் தலைவர்மேல் கொண்டிருக்கும் அன்பின் பெருக்கத்தை!

* * *

### மொத்தத்தில் 736 பேர் கைது செய்யப் பட்டனர்:

அகாலியர்களைக் கஷ்டப்படுத்திய போலீஸ்காரர்களின் குற்றங்கள் நாளுக்கு நாள் மிகுந்து கொண்டிருக்கின்றதாம். 1-11-22 மாலை ஐம்பது அகாலியர்கள் தங்களையும் கைது செய்துவிடும்படி போலீஸ்காரர்களைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களை குருகாபாக்கில் போலீஸ்காரர்கள் கைது செய்கின்றனர். இது வரையிலும் 736 பேர் கைது செய்யப் பட்டிருக்கின்றனர். முன்னைவிட கலகம் மிகவும், வேகத்துடன் நடைபெறு கின்றதென்று பிரபந்தக் கமிட்டியார் குறிப்பிடுகின்றனராம்.

### மதுரை நாடார் ஊழியப்பிரசுர சபையார்க்கோர் வேண்டுகோள்.

நாடார்குலோத்தமர்களே!

மேலே கண்ட திருநாமத்துடன் நம் மவர்களின் முன்னேற்றத்தைக் கருதி ஓர் சபையானது நம்முன்னோர்களாகிய பாண்டிய ராஜாக்களின் அரசியல் ஸ்தானமும் தென்னிந்தியாவிற்கோர் திலகம் போன்று விளங்குவதுமாகிய புண்ணியஸ்தலம் மதுரை யம்பதியின் கண் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தென்று சென்ற ஜுலை மீ 15 உ வெளிவந்த மித்திரனில் பிரசுரிக்கப் பட்டிருந்தது. யாவர்க்கும் தெரிந்த விஷயம். இதற்கு முன்னும் அந்தச் சபையார்கள் விடுத்த 8 ஊழியப் பிரசுர சர்க்குலர்களும் அவற்றில் நம்முன்னேற்றத்திற்கான பலவிஷயங்களையும் தங்களுடைய சிரமத்தை சிறிதும் கருதாது எடுத்தோதுவதற்குக் காரணமாயிருந்த அன்பர்களின் குலாபிமானம் மிகவும் போற்றத்தக்கதே! சபை ஏற்பட்ட பின்பு "ஒரு லக்ஷம் அங்கத்தினர் தேவை" என்றதலைப்பைக் குடப்பெற்ற தங்களுடைய 1-வது சர்க்குலரை பிரசுரித்திருக்கிறார்கள், அதே பிரகாரம் இதின்மற்றறோர் பக்கத்தில் வரையப் பெற்றிருக்கிறது, அதனைக் கண்ணுற்றும் நம்குல சிகாமணிகள் இதுகாறும் நம் தாய்ச் சங்கத்திற்கு அங்கத்தினராகச் சேராதிருந்ததால் உடனே ஒரு லக்ஷம் மாத்திரமல்ல பல லக்ஷக்கணக்காக அவர்வுடன் சேர்வார்கள் என்பதே எமது துணிபு,

இது நிற்க, மேலே சொல்லப்பட்ட ஊழியப் பிரசுர சபையார்கள் தங்களுக்கு ஓய்வு நேரங்கிடைத்த பொழுது ஏதாவது ஒரு விஷயத்தை எழுதி அச்சிட்டு பிரசுரிப்பது மாத்திரம் போதாது, அச்சபையார்களாலேயோ அல்லது அவற்றின் ஆதரவினாலேயோ மாதமொரு முறையாவது சிறந்த குலாபிமானிகளும் அவ்வூரின் கண்ணுள்ள நம்குல முக்கியஸ்தர்களும் இன்னும் நம்குல சகோதரர்களும் மீட்டிங்கு கூடி நம்முன்னேற்றத்திற்கான விஷயங்களையும் கல்வி கைத்தொழில் விவசாயம் முதலியவற்றின் அபிவிருத்தியைப் பற்றியும் நம் தாய்ச் சங்கத்தின் கட்டளைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டியது நம் கடமை என்பதைப் பற்றியும் உபந்யாசங்கள் நடக்கும்படி செய்து அவற்றை சர்குலர் மூலமாகவும் மித்திரன்கள் வாயிலாகவும் வெளியிடுவது நலம் ஆதலால் அச்சபையின் பிரஸிடெண்ட் ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தர நாடார் அவர்களும் வைஸ்பிரஸிடெண்ட் ஸ்ரீமான் பெ. ப. டி. பாண்டிய நாடார் அவர்களும் காரியதரிசிகள் ஸ்ரீமான்கள் K. துரைச்சாமி நாடார் அவர்களும் ப. ரா. முத்துச்சாமி நாடார் அவர்களும் இதை சற்றுகவனித்து மாதமொரு மீட்டிங்கு நடத்த பிரயாசை யெடுத்தால் மிகவும் நலமாயிருக்கு மென்று ஸ்ரீமான் K. P. விஸ்வநாதன் எழுதுகிறார்.

---

ம்செய்து மேல்கண்ட நாமமிலங்க ஓர் கிளைச்சங்கம் ஸ்தாபித்துச் சென்றார்கள்:

நாளது ஆவணிமீ 20உ யன்றும், புரட்டாசிமீ 19உ யன்றும், முறையே நாட்டாண்மை ம-ா-ா-ஸ்ரீ ரு மலிங்கநாடாரவர்கள், மகா-ா-ஸ்ரீ ரு, பு சட்டமுத்து நாடாரவர்கள் அக்கிராசனத்தின் உபந்நியாசம் நடைபெற்றது என்று ஸ்ரீமான்களான ஆ. சு. காளியப்பநாடார் ஆ. க. அய்ய நாடார் அறிவிக்கிறார்கள்.

### க்ஷத்திரிய பாலர் சங்கம் பாலையம்பட்டி.

16-9-22 ஷை சங்கம் மீட்டிங் மகா-ா-ா ஸ்ரீ தி. ரு. சுப்ரமணிய நாடாரவர்கள் மேல்மாடியில் சிவசி துரைச்சாமி நாடாரவர்கள் அக்ராசனத்தின் கீழ் நடை பெற்றது என்று காரியதரிசி எழுதுகிறார்.

### ஆதித்த வாலிப சங்கம்காயாமொழி

நிகழும் 1098 ஆண்டு ஆவணிமீ 30உ வெள்ளிக்கிழமை இரவு 15-9-22 ல் காயாமொழி முப்புடாதி அம்மன் கோயிலின்முன்பு அமைக்கப்பட்ட கொட்டகையில் ஷை சங்கமானது கீழவீடு எஸ். பி. ஆதித்த நாடாரவர்கள் தலைமையின் கீழ் கூடியது என்று காரியதரிசி ஸ்ரீமான் சோணசலஆதித்த நாடார் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# அறிவிப்பு.

சிலோனிலுள்ள நமது சந்தாநேயர்களுக்குக் கடந்த வாரத்திலிருந்தே, வி. பி. போட்டுக் கொண்டு வருகிறோம். நமது சந்தா நேயர்கள் குலாபிமானத்தை முன்னிட்டு, வி. பி, வரும்போது காலா காலத்தில் பணத்தைக் கட்டி பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். ஆனால் கொழும்பிலுள்ள நமது சந்தாநேயர்கள் மட்டும் 30-10-22 தேதிக்குள் நமது ஆபீஸ்க்கு மணியார்டர் மூலமாய் சந்தாத்தொகையை அனுப்பி, விருதுபட்டி ரிப்போர்ட்டு புஸ்தகம் இனாமாகவும் பெற்றுக் கொள்ளலாம். அல்லது நமது அதிபர் அவ்விடம் விஜயஞ் செய்யும் போது நேரில் பணத்தைச் செலுத்திக் கொள்ளலாம். அப்படி மணியார்டர் மூலமாவது நேரிலாவது பணம் செலுத்தினாலும், சந்தா நம்பரைத் தெரிவித்துத் தீரவேண்டும்.

மானேஜர்.

நாடார்குல மித்திரன்
துந்துபிஞு புரட்டாசிமீ 25உ

## மதிகுலமாரனும், ஸ்ரீமான் பாரதியும்.

மதுரை இராமநாதபுரம் ஜில்லா மகா நாட்டின் விஷயாலோசனை சபையில் ஸ்ரீமான் பாரதியார் நாடார்களுக்கு விரோதமான வார்த்தைகளை வழங்கியதாக மதிகுலமாரன் திராவிடன் பத்திரிகையில் எழுதி வெளியிட்டிருந்ததை அப்படியே சென்ற வாரம் நமது மித்திரனில் பிரசுரித்திருந்தோம். அதற்கு 6-10-22ல் வெளிவந்த சுதேசமித்திரனில் ஸ்ரீமான் பாரதியார் சொல்லுஞ் சமாதானத்தையும் மற்றொருபத்தியில் பிரசுரஞ் செய்திருக்கின்றோம்.

நமக்கு இதுவிஷயமாய் யாதொரு சரியான தகவலுங்கிட்டாததால்பாரதியும் இப்படிப் பகர்வாரா வென்று தான் சந்தேகித்தோம். மகாநாட்டுக்கு டெலிகேட்டாகச் சென்றிருந்த ஒரு நாடாரிடம் இதன் உண்மை எப்படி யென்று நாம் விசாரித்ததில் அவர் பின் வருமாறு எம் நேரில் சொன்னார். அதாவது.—

"விஷயாலோசனைக் கமிட்டியாரில் சிலர் வந்து கூடியிருந்தார்கள். அதில் ஸ்ரீமான் பாரதியாரும் ஒருவர். நாடார்களிலும் இருவர் இருந்தார்கள். நான் விஷயாலோசனைக்கமிட்டி மெம்பராயில்லாதபடியால் பக்கத்திலிருந்து கொண்டு நடபடிக்கைகளைப்பார்க்கலாமென்றிருந்தேன். ஆலோசனை சபை ஆரம்பிக்கக் கொஞ்சம் தாமதமாகிறதுபோலத் தெரிந்தது. விஷயம் செய்திருந்த பலரும் பல பல காரியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் ஈரோட்டிலிருந்து வந்திருந்த காங்கிரஸ் அபிமானி ஒருவர் ஸ்ரீமான் பாரதியைப் பார்த்து தஞ்சாவூர் ஜில்லா மகா நாட்டில் நாடார்களைப் பற்றி நிறைவேற்றிய தீர்மானத்தை மதுரை இராமநாதபுரம் திருநெல்வேலி இம்மூன்று ஜில்லாக்களிலும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரும்படி ஒரு தீர்மானஞ் செய்து, ஒரு சர்க்குலரும் அனுப்ப வேண்டுமென்று சொன்னதாகவும்: அதற்கு ஸ்ரீமான் பாரதியார் பதிலளிக்கும்போது நீங்கள் தஞ்சாவூர் ஜில்லாவை நினைத்துக் கொண்டு இங்கு பேசக்கூடாது; அங்கேயிருக்கிறமாதிரி வேறு, இம்மூன்று ஜில்லாக்களிலுமுள்ள நாடார்கள் வேறுமாதிரிதான்; ஆகையால் இங்கு சாத்தியப்படாதென்று சொன்னதாகவும், அப்போது விஷயாலோசனை கமிட்டியின் சார்பாயிருந்த நாடார்களிருவரும் அவர்கள் தனித்த ஹோதாவில் பேசிக்கொண்டிருப்பதால், இச்சமயம் இதைப்பற்றி நாம் அவரைக் கண்டித்தால் வார்த்தை தடித்துப் பிரமாதமுண்டாகி விடும் என்றெண்ணி விஷயாலோசனைக்கமிட்டியை விட்டு வெளியே சென்றுவிட்டதாகவும், இனித்தானும் அங்கிருக்கக் கூடாதென்று வெளியில் வந்துவிட்டதாகவும் பின்னர் விஷயாலோசனைக் கமிட்டியில் நாடார்களைப் பற்றி ஒரு தனித் தீர்மானம் வந்து 14 பேர்கள் சாதகமாகவும் 18 பேர் பாதகமாகவும் ஓட்டுக்கொடுக்க தீர்மானம் அடிபட்டுப் போனதாகத் தாம் கேள்விப் பட்டதாகவும் சொன்னார்"

மதிகுலமாரன் வழுத்தியதொரு விதமாகவும், ஸ்ரீமான் பாரதியார் பகர்வதொருவிதமாகவும், நாம் கேள்விப்பட்டதொருவிதமாகவும் இருப்பதால் இதனுண்மை தெளிவுபடும்வரை நாம் ஒன்றுஞ்சொல்வதற்கில்லை. எப்படியேனும் இச்சந்தேகத்தை நிவர்த்தி பண்ண வேண்டியது அவசியமாயுமிருக்கிறது கல்வியில் வல்லவரான ஸ்ரீமான் பாரதியார் சொல்லாத வார்த்தை வெளியில் வருமாவென்று அநேகர் நினைக்கக் கூடும்.

இதன் உண்மை எவ்வாறு என்பதை அறிய நாடார்குலத்தவர்களில் அநேகர் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாம். ஆகையால் இதனுண்மையைச் சரிபார்த்து துலக்க வேண்டியது அவரவர்களின் கடமையெனக் கொண்டு நமக்கு எழுதியனுப்புவார்களாக.

இதன் முடிவை பரீக்ஷித்தபின்னர் பழுத்த தேசாபிமானிகளின் கொழுத்தவார்த்தைகளின் பொலிவையும் மேல் பூச்சுக்காரர்களின் வாக்குச் சம்பிரதாயங்களையும் மகாநாட்டின் தீர்மானங்களையும் பற்றி விஸ்தாரமாக எழுதுவோம்.

# Notes & Comments

## குறிப்புகளும் அபிப்பிராயங்களும்.

### இலங்கை விஜயம்.

நமது அதிபரவர்கள், நாளது அற்பசிமீ 11உ இவ்விடமிருந்து போட்டு மெயிலில் புறப்பட்டு, தூத்துக்குடிக்குப் போய்ச் சேருவார்கள். அங்கிருந்து கப்பல்சௌகரியம் பார்த்து, கொழும்பிற்கு புறப்படும் தேதியையும் நேரத்தையும் கொழும்பிலுள்ள இலங்கை பாலிய நாடார் சங்கக் காரியதரிசி முதலிய உத்தியோகஸ்தர்களுக்கும், மற்ற நமது நண்பர்களுக்கும், தந்தி மூலம் அறிவிப்பார்.

* *

### மகாஜன சங்கத்தார் உடனே கவனிக்கவேண்டும்.

நமது நாடார் மகாஜன சங்கம் ஏற்பட்டு எட்டுக் கான்பரன்ஸுகள் நடக்கவும், இராமநாதபுரம் ஜில்லாவில் திருப்பத்தூர் காரைக்குடி மார்க்கமாக நமக்குத் தெரிந்தவரையில் சுமார் 15) கிராமங்கள் நாடார்கள் வாசஸ்தலமாக இருந்தும் அவ்வட்டகையிலுள்ள நம்மவர்களுக்கு, நமது மகாஜன சங்கத்தைப்பற்றி யாதொன்றும் தெரியாமலிருப்பதாக அறிகிறோம். அவ்வட்டகையில் நம் குலத்தினரில் ஐக்கியஸ்தர்களும், தக்க புஸ்திதி படைத்தவர்களும் அதிகம்பேர்கள் இல்லாததுபோல்த்தான் தெரிகிறது. ஆகையால் மகாஜனசங்கத்தின் நோக்கத்தை பரவச் செய்ய அதிக முயர்ச்சி எடுத்து பிரசாரஞ் செய்ய வேண்டியதிருக்கிறபடியால், மகாஜன சங்கத்தார் உடனே இதைக் கவனித்து தக்க சாமர்த்தியமுள்ள பிரசாரகர்களை அவ்வட்டகைக்கு அனுப்புவார்கள் என்று நம்புகிறோம்.

* *

### சுதேச மித்திரனுக்கு, அறிவிப்பு.

சாணார் என்னும் பதத்தை இடை இடையே இன்னும் சுதேசமித்திரன் தனதங்கத்தில்ச் சூடிவருகிறானென்று கண்டித்து நமக்குப்பல நிருபர்கள் எழுதியிருக்கிறார்கள், அவைகளை நாம பிரசுரிக்காமல் விட்டிருக்கிறோம். சாணார் என்னும் பதம் உயர்வோ தாழ்வோ எப்படியாயினும் சரி கவர்ன்மெண்டாரே அப்பதத்தைப் பிரயோகிக்கலாகாதென்று முன்னரே அறிவித்திருப்பது சுதேச மித்திரனுக்குத் தெரிந்திருந்தும் அப்பதத்தை உபயோகப்படுத்திவருவது விசனிக்கத்தக்கதே.

இனிமேல் அப்பதத்தைப் பிரயோகிக்கா திருக்கும்படி அறிவித்து மறுபடியும் ஒரு அறிவிப்புச் செய்யவும் நேராதபடி பார்த்துக்கொள்ள சுதேசமித்திரன் ஆசிரியரையும் வேண்டிக் கொள்கிறோம்.

இவ்விஷயத்தை, பினாங்கு கொலாலம்பூர், ரங்கூன், இலங்கை முதலிய ஜலப்பிர தேசங்களிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளின் ஆசிரியர்களும் கவனிக்குமாறு எச்சரிக்கிறோம். இரண்டொரு அங்குள்ள பத்திரிகைகளில் இப்பதம் அடிக்கடி இன்னும் கவனிக்கப்படாமல் பதிப்பிக்கப்பட்டுக் கொண்டுதான் வருகிறது. இது பற்றிய தனிக்கடிதமும் அவர்களுக்கு எழுதியும் அதைக் கவனியாதிருப்பது விசனிக்கத்தக்கது.

* *

### மதிப்புரை.

நாடார் மகாஜன சங்க மகத்துவ ரத்தினம் என்னும்புஸ்தகம் நமது பார்வைக்கு வரப் பெற்றோம். இஃது மதுரை பாண்டியகுலதீபம்பத்திராதிபர் ஸ்ரீமான் க. சு. அருணகிரி நாடாரால் இயற்றப் பெற்று மதுரை நாடார் ஊழியப் பிரசுரசபை காரியதரிசி, ஸ்ரீமான் K. துரைச்சாமிநாடாரால் அச்சியற்றப்பட்டது. இதில் பலவர்ணமெட்டுக்கள் அடங்கியுள்ளது. யாவரும்தெளிவாக எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய பாட்டுக்களே. நமது பத்திராதிபர்கள், மகாஜன சங்க உத்தியோகஸ்தர்கள் மற்றுமுள்ள நமது குலாபிமானிகள் பேரிலும், நமது மகாஜன சங்க எட்டுக்கான்பரன்ஸ்களின் சிறப்பைப்பற்றியும்அநேக பாடல்களிலிருக்கின்றன. வேண்டுவோர் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். விலை அணா இரண்டுதான். விலாசம்.

பத்திராதிபர்,
பாண்டியகுல தீபம், மதுரை.

## மதுரை மகா நாடும் நாடார்களும்.

ஸ்ரீமான் எஸ். எஸ். பாரதியார் சுதேசமித்திரனில் பின் வருமாறு எழுதுகிறார்.—

ஐயா,

தங்கள் மித்திரன் பத்திரிகையில் சமீபத்தில் நிகழ்ந்த மதுரை ஜில்லா மகா நாட்டில் நமது நாடார் சகோதரர்களின் ஆலயப் பிரவேச உரிமையை நான் ஆட்சேபித்துப் பேசினதுபோல ஒப்பமில்லாத ஒரு நிருபம் வந்ததாக வெளியிடப்பட்டிருந்ததென்று இங்கு ஒருவர் என்னிடம் பிரஸ்தாபித்தார் (மித்திரனில் வெளிவந்த வியாசத்தில் அம்மாதிரி கான்பரன்ஸில் ஸ்ரீமான் பாரதி பேசியதாகச் சொல்லியிருக்கவில்லை. விஷயாலோசனைக் கமிட்டியில் பேசியதாகவே அந்நிருபர் எழுதியுள்ளார்.—ப-ர்.)

இது எனக்கு மிகுந்த வியப்பைத்தந்தது. முதலில் சமுதாயப் பொது விஷயங்களில் என் அபிப்பிராயங்களைத் தெரிந்தவர்களுக்கு இது அசம்பாவித மென்பது தெளிவாகும். ஆனாலும் உண்மையறியாத சிலர் இதை நம்பநேருமாகையால், இந்த தப்பான நிருபநேயர் பிரகாரத்தை ஆக்ஷேபிக்கலானேன். 24-9-22-ல் நடந்த மதுரைஜில்லா மகாநாட்டில்ப்பொதுக்கூட்டத்தில் முடிவு செய்யப் பட்ட ஆலயப்பிரவேசப் பொது உரிமைத் தீர்மானம் விஷய சபையில் நான் கொணர்ந்து அங்கீகரிக்கப் பட்டது. பொதுக் கூட்டத்தில் அந்த தீர்மானம் பேசப்படும்போது, நான் சபையில் இல்லாததால் அது விஷயமாய் நான் ஒன்றுமே பேச நேரவில்லை.

"விஷயக் கூட்டத்தில் இது விஷயமாகநான்பிரேரேபிக்க கொணர்ந்தவன். ஆனால், இந்த விஷயமான தீர்மானத்தை யாதொருஜாதியாரையும் சுட்டாமல், பொதுவாக இந்து சமுதாயத்தில் அனைவருக்கும் ஆலய தரிசன முதலிய சமுதாய உரிமைகளில் சமத்துவமிருக்க வேண்டுமென்று பிரேரேபிக்க செய்தேன். அப்போது சில சிநேகிதர்கள் நமது நாடார் சகோதரர்களைச்சுட்டித் தீர்மானமிருப்பது நலமென்று சொன்னதுண்டு. ஆனால் என்னிடம் சில நாடார் சிநேகிதர்களே தங்களைத் தனித்து சுட்டி எவ்வித தீர்மானமும் கொண்டுவருவது தங்களுக்குத் திருப்தியில்லை என்றுசொன்னதைமுன்னிட்டும்; மேல்கீழ், என்ற பாகுபாடில்லாமல், ஹிந்துக்களில் பல இடங்களில் பலவகையாகப் பல்வகுப்பினர்களுக்கு இவ்வித சமுதாயப் பொதுஉரிமைகளை ஆக்ஷேபிக்கிறவர்கள் நம்மில் இருப்பதால், எல்லாருக்கும் பொதுவாக ஒரே தீர்மானமிருப்பதே பொருத்தமென்பதை உத்தேசித்தும், இந்த தீர்மானத்தை நான்பொதுவாக பிரேரேபிக்க செய்து இந்த நியாயங்களையும் சொல்லி, அவசியம் என்று விரும்பினால், நாடார் சகோதரரைக் குறித்து ஒருதனித்தீர்மானம்சேர்ப்பதில் எனக்கு ஆட்சேபமில்லை என்றும், ஆனால் அது நாடார் இஸ்ருக்கே இஷ்டமில்லாத தென்று சொன்னேன். மேலும் சில ஆலயங்களில் மறவர் முதலிய சிலரை மறுப்பதால் பொதுவான தீர்மானமும் இருக்கவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினேன். டி விஷயச்சபையில் தீர ஆலோசித்து பெரும்பாலோர் தீர்மானம் பொதுவாக இருப்பதே உசிதம் என்று முடி

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# பழமொழிக் களஞ்சியம்.

**சிவசொத்து குல நாசம்** என்பதைமறந்துசிதம்பரமகமைபணைவைத்துக்கொண்டு, வீண்வம்பு பேசும் பிரபுக்களே! மறந்து விடாதீர்கள். ஏழைகளிடத்தில் காலும் அரையுமாக வசூல் செய்து, மொத்தமாக ஒருலக்ஷம்இரண்டுலக்ஷம் மதிப்புள்ள பணத்தை, ஆளுக்கிரண்டாக அமுக்கிக்கொண்டு அரைவட்டிக்கும் கால் வட்டிக்கு வைத்துக்கொண்டும் அதையேமுதலாக வைத்துக்கொண்டு கௌரவமாக அதிக லாபம் அடைவதைப் பார்க்கிலும் கேவலம் பிச்சை எடுத்து பிழைத்தாலும் பெரும் பிழையாகுமோ! இந்த உபிரோதி செத்தபிழைப்பை யார் பிழைக்கச் சொன்னார்கள்! நெம்பரமகமை பூராவும் வேண்டுமென்று நம்மகாஜனங்கள் கிளர்ச்சி செய்யும்போது, பைசாமாற்றி பாக்கியில்லாமல்பணத்தைகட்டிவிட்டு. மற்றக் காரியத்தைக் கவனிப்பதை விட்டுவிட்டு, அவரிடத்தில்முதலில் வாங்கிக்கொள்வோ!இவரிடத்தில் முதலில் வாங்கிக்கொள்வோ! என்று எத்தனை நாள்கள் தான் சாக்குப்போக்குச் சொல்லலாமென்று நினைக்கிறீர்கள். நாடார் மகாஜன சங்கம் மும்முறை உங்கள் பால் கமிட்டி ஏற்படுத்தி காரிய சித்தி அடையவில்லை என்று இருமாப்புடனிருக்கிறீர்களா? உங்கள் இருமாந்த எண்ணத்தின் மேலமண் விழ காலம் சமீபித்து விட்டது.

* * *

**ஆற்றின் அக்கரை கடக்கும்வரை, அண்ணந் தம்பி அப்புரம் நீயாரோ நானாரோ!** என்பது போலவே நமது தேசத்திலுள்ள பல கக்ஷியினருடைய நோக்கமும் இயக்கமுமிருந்துவருகிறது காரியம் ஆகும்மட்டும் கழுதையானாலும் காலைபிடி என்பதுபோல தாங்கள் காரியம் பூர்த்தியாகும்மட்டும்செய்யாதஜாலவித்தை களெல்லாம் செய்கிறதும், பேசுகிறதும், தாங்கள் தான், தேசாபிமானி என்றும் இராஜ விசுவாசிகளென்றும், பழங்கதை படித்துக்கொண்டு; தேசத்தினர்களை சும்மா இருக்கவிடாமல் புதிய புதிய கக்ஷிகளையும் அபிப்பிராயங்களையும் கிளறிக்கொண்டிருக்கிறதும், பின் தங்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களும், கண்டோர் பிரமிக்க நல்ல கௌரவப் பட்டங்களும், சௌகரியமாய் சாப்பிடத்தக்க சம்பளமும், தலைவர் என்ற பட்டமும் தப்பாமல் கிடைத்த வுடனே நாட்டில் யார் கெட்டாலென்ன! வாழ்ந்தா லென்ன என்று எண்ணி சும்மா இருந்து வருகிறார்கள். இப்படித்தான் நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு கக்ஷியினரும் தங்கள் நோக்கத்தை, தேசத்தில் பரப்புவதற்குத்தான், தங்கள் தங்கள் கக்ஷிக்கு ஆள் சேர்க்கிறார்கள். தேசத்தில் இருந்து

---

வு செய்தார்கள் அவர்கள் முடிவு செய்தபடியே தீர்மானம் பொதுகூட்டத்திலும் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது! ஆனால் இந்த தீர்மான விஷயமான பிரசங்கங்களில் மிகுதியும் நமது நாடார் சகோதரர் உரிமையைப் பற்றித்தான் அதிகம் பேசப்பட்டது உண்மை இப்படியிருக்க, இந்த விஷயத்தில் நான் மாறுபட்ட அபிப்பிராயம் சொன்னதாக பிரஸ்தாபம் வந்தது ஆச்சரியமே.

விஷயக் கூட்டத்தில் மட்டும் நடந்த விஷயங்களைப் பற்றிப் பத்திரிகைக்கு ஒரு நிருபநேயர் ஒப்பமும் வையாமல், உண்மையையும் சரியாகச் சொல்லாமல் வெளியிட்ட காரணத்தால், இந்த அளவு உண்மையை வெளியிட அவசியம் நேரிட்டது. ஆனால் இது விஷயமாக முன் திருநெல்வேலி ஜில்லா தார் விசேஷ மகாநாடு, மாகாண மகாநாடு முதலிய கூட்டங்களில் நானே தீர்மானங்கள் கொணர்ந்து பிரேரணை செய்து பேசியதை யறிந்த பலருக்கும் என் அபிப்பிராயத்தைப் பற்றி சந்தேகத்துக்கும் இடமிராதென்பது ஒருதலை அறியாத சிலர் மனதிலும் சந்தேகம் எழாவண்ணம் இந்த நிருபம் எழுதலானேன்.

---

வரும் குறைகளை கவனியாமலும தேச மகாஜனங்கள் ஒற்றுமையுடன் வாழ்வதற்கேதுவான வழிகளைக் காட்டாமலும், மகாஜனங்கள் பேதா பேதமின்றி ஐக்கியத்துடனிருக்கவும்வகையில்லை. ஆனால் "தேச முன்னேற்றம்" "தேசாபிமானம்" என்றவார்த்தைகளுக்கு மட்டும் நமது நாட்டில் பஞ்சமேஇல்லை. இந்த லக்ஷணத்தில்நாடார்கள் ஒருகக்ஷியிலும் சேராமல் யிருக்கிறார்களென்று, பல பத்திரிகைகளிலும், பிரசங்கங்களிலும், பயங்கரமாகவும் அந்தரங்கமாகவும். தங்கள் அபிப்பிராயத்தைக் காட்டியும் காட்டாமலும் கோக்கமாகப்பேசுகிறதும் எழுதுகிறதுமாக இருக்கிறார்கள். இவை எல்லாம் நாடார்கள் நன்கு அறிவார்கள் தன்பலமும் ஊக்கமும் அறியாமல் நாடார்கள் தயங்கிக்கிடந்த காலம் மலையறி விட்டது.

* * *

**நாலு சேத்தை கூடினது ஒரு கத்தை** என்பதை மறந்த நமது தேசத்திலுள்ள பல கக்ஷினர்களும் தங்கள் புத்திக்கும் புத்திக்கும் ஒத்ததை மட்டும் வைத்துக்கொண்டு, ஓலமிடுகின்றனர்களே தவிர. தேசத்திலுள்ள பாதக சாதகங்களைக் கவனியாமலும், அதற்கு பரிகாரந் தேடுவது தங்கள் கடமை என்பதை மறந்து, தேச முன்னேற்றமடையவேண்டுமென்ற நல்லபிப்பிராயமுடைய மற்றவர்கள் ஆதரவையும் அபிப்பிராயத்தை கவனிப்பதேயில்லை.

* * *

**நூற்றைக் கெடுத்தது குருணி** என்பதுபோல் நாடார்களில் நூற்றுக்கு 7 பேர்கள் கால மாறுபாட்டால் கள்ளிறக்கி ஜீவனஞ் செய்யப்போக நாடார் ஜன சமூகம் பூராவும் கள்ளிறக்கும் தொழிலை கையாடிக் கொண்டிருப்பதுபோல் கபடக் கருத்துடன் சில படித்த முண்டங்கள் பொது பத்திரிகைகளில் எழுதுகிறதும் பேசுகிறதுமாக யிருக்கின்றன. இப்படி படித்தவர்களுக்கே அறிவில்லாம லிருக்கும்போது படியாத பாமர ஜனங்களின் தப்பபிப்பிராயத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இப்போது நாடார்களில் கள்ளிறக்கிவந்த சிறு பாண்மையோரும் அநேகமாய் நாடார் மகாஜன சங்கத்தின் தீர்மானத்தை அனுசரித்துஅத்தொழிலை நிறுத்தி விட்டார்களாயினும் முற்றிலும் நிறுத்திவிடும்படி வற்புறுத்தி வேண்டிக் கொள்ளுகிறோம்.

* * *

**ஊரார் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி, கையே** என்றது போல நமது இந்தியக் கவர்ன்மெண்டின் வரவு செலவு கணக்கு மெம்பர் லார்டு மெல்காம்ஹேய்லி, தனது இஷ்டப்படி, வரவு வினங்களைக் கவனியாமல், துண்டு போட்ட காரணத்தினால், சிக்கனக்கமிட்டி ஒன்று ஏற்படுத்துவது அவசியமாயிற்று. இப்படிப்பட்ட தாராள சிந்தையுள்ள, தர்மசீலரை இந்தியாவிலிருந்து ஸ்பெஷலாக இங்கிலாந்துக்குவரவுசெலவுதிட்டத்தை அமைக்க அனுப்பினால் அரை நிமிஷம் உத்தியோக வைக்க லாயக்கில்லாதபடி, இங்கிலாந்திலுள்ள பொது ஜனங்கள் செய்துவிடுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் இந்தியாவில் அவரை கேட்பதுயார்? கேட்டுத்தான் என்ன செய்வது? இந்தியர் வரிப்பணத்தை செலவு செய்வதற் கெல்லாம் அவர் இஷ்டத்தைப் பொறுத்திருக்கிறது அவர்கண்ட வரிக் கொடுக்கிறாரா? ஆனால் அது இல்லை. அப்படியிருக்க நாம் அனுபவிக்கும் வரி கஷ்டம் அவருக்கு எப்படித் தெரியும்?

**தாய்ச்சீலைக்கு சாண் துணியில்லை தலைக்குமேலே சரிகை துப்பட்டி** என்பது போலே நமது நாட்டிலுள்ள பல கக்ஷியினரும் தென் ஆப்பிரிக்கா, கானட, பீஜ தீவு, ஆஸ்திரேலியா முதலிய அந்நிய நாடுகளிலுள்ள இந்தியர்களுக்கு சமத்துவங் கொடுக்க வில்லை என்று பத்திரிகை வாயிலாகவும்; பிரசங்கங்கள் மூலமாயும் சதா ஓலமிட்டுக் கொண்டிருக்கிறார்களே இவர்கள் தங்கள் பக்கத்திலிருக்கும் இந்தியா சகோதரர்களுக்கு கொடுக்கும் சமத்துவத்தை என்னவென்று சொல்லுவது! உங்கள் கண்ணில் யிருக்கும் தூணைஎடுத்துவிட்டு மற்றவர்கள் கண்ணில்யிருக்கும் துரும்பை எடுங்களேன்.

---

## இந்தியாவின் தற்கால நிலைமையும், சுயராஜ்யத்தின் அவசியமும்

உலக யுத்தத்திற்குப் பின் எந்தேசத்தைப் பார்த்தாலும் குழப்பமும், சண்டை சச்சரவுகளும் மேற்பட்டுக்கொண்டிருப்பதால், வியாபாரம், விவசாயம் இவ்விரண்டின் குறைவின் காரணத்தை யிட்டு, எத்தனை ஆயிரக்கணக்கான ஜனங்கள் தங்கள் உடல்களை வளர்க்கச் சக்தியின்றி கஷ்டப்படுவதை நாம் பத்திரிகைகளின் மூலமாய் வாசித்தும், நமது கண்கள் கொண்டு பார்த்து மிருக்கிறோம். பார்த்தும் வருகிறோம். பரதகண்டமென்னும் நம் தாய் நாடாகிய இந்தியா தேசத்திலும் தற்கால நிலைமையை கண்ணோக்குமின், ஜலப் பெருக்குகளாலும், ஒத்துழையாமை இயக்கத்தாலும். ஜாதி மத நிற வேற்றுமைகளாலும் பொது ஜனங்களுக்கு நேரிடும்கஷ்டமானது மென்மேலும் வளர்ந்து கொண்டே வருகின்றது.

சுயராஜ்யம் அடைய அவாக்கொண்டு எத்தனையோ மகான்கள் தங்கள் சொத்து, உலகபாக்கியம் பிரக்கியாதி இவைகளை எல்லாம் விட்டொழித்து பாரத மாதாவைச்சேவிக்க வேண்டும் என்று உழைத்து வருகின்றனர். இந்தியா சுயஆட்சியை அடைய வேண்டும் என்பதே எல்லா இந்தியனுடைய சதா பிரார்த்தனையும் விடாமுயற்சியுமாயிருக்க வேண்டும். ஆனால், இத்தகைய பதவியை அடைய அநேகரால் பற்பல வழிகள் பிரேரணைக்குக்கொண்டு வரப்பட்டிருப்பினும், நம்முடைய சுயபுத்திக்கு இசைந்ததும், எல்லோராலும் அனுஷ்டிக்கப்படக் கூடியதும் சாத்தியமானதும், பிரிட்டிஷ்கவர்ன்மெண்டால் அங்கீகரிக்கப் படக் கூடியதுமான வழி ஒன்றைத்தேட, அதைப் பரிபாலித்து வருவதே நம்கடமை. இந்தியராகிய நாம் ஜாதிமதம் ஆகிய முக்கியமான இரண்டு வேற்றுமைகளையும் நிராகரித்து எல்லோரும் ஒரு தாயின் மக்களேனவே சமமாயும், சிநேகமாயும் அன்பாயும் நடந்துகொண்டால் சுயராஜ்ஜியமாகிய நீதியின் செங்கோல் அடுத்து விட்டது என்று அறியலாம். இத்தகைய ஸ்திதிவருமளவும் அவநம்பிக்கையும் தாள் என்னங்களுமே ஜனங்கள் மனதை பிடித்துகொண்டிருக்கும் ஒத்துழையாமைஇயக்கத்தாலும், புறதேசதுணியை பகிஷ்கரிப்பதாலும், கைராட்டினத்தை கையாளுவதாலும், கதர் அணிந்து கொள்வதாலும், இந்திய கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதே யல்லாமல், மனதிலுள்ள அவநம்பிக்கை, மாறவே மாறாது. சர்வத்துக்கும் மூலாதாரமாகிய சமத்வத்தை கடைப்பிடித்துத் நிண்டாமையை ஒழித்து, சகோதரத்வத்தை நிலைநிறுத்துங்கால், இத்தகைய அவநம்பிக்கைக்கு இடமிராதென்பதற்கு கொரு சிறிதும் ஐயமில்லை. மேலும் உயர்பதவியை அடையும் ஒவ்வொரு இந்தியனும் தன் உத்திரவாதத்தை அறிந்து பொதுஜன நன்மை என்னும் பொறுப்பை உணர்ந்து நியாயத்தைக் கைதூக்கி, சத்தியத்தை அமுலுக்குக் கொண்டுவந்து பாரதமாதாவைச் சேவித்தால், இந்தியா, சம உரிமைகளுடன் எல்லோராலும் புகழ்ப்பட்டு தன், சுவாதீனத்தை அடையும் என்பதற்கு அச்சமேயில்லை.

இந்திய நேசன்.

---

## தேவை.

சங்கீதத்திலும், ஹார்மோனியத்திலும் நன்கு தேர்ச்சி பெற்ற ஒரு பெண் தேவை. சிறு பெண்குழந்தைகளுக்கு ஹார்மோனியம் சீக்கிரமாக கற்றுக்கொடுக்கத் தெரிந்திருக்கவேண்டும். இதற்குமுன், எங்கேயாவது நற்சாக்ஷிபத்திரம் பெற்றிருந்தால் அதன் நகலை நமது பார்வைக்கு அனுப்பவேண்டியது. நற்சாக்ஷிப்பத்திரத்தையும்திறமையையும்பொருத்து தக்கசம்பளம்கிடைக்கும். மற்ற விபரங்களுக்குக் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்துக் கொள்ளவும்.

மானேஜர்,
"நாடார்குல மித்திரன்" ஆபீஸ்
அருப்புக்கோட்டை.

---

## திருத்தம்.

சென்ற வாரம் வெளிவந்த நமது மித்திரன் 6-வது பக்கத்தில் நாடார் சொல் ஆராய்ச்சி நூல் அரங்கேற்றும் நிதிக்கு சிவகாசியில் வசூல் செய்த ஜாப்தாவில், கமுதி சு. ராம. அருணாசல நாடார் ரூ 0-4-0, திருமலாபுரம் அ. அ. இராமசாமி நாடார் ரூ 1—0—0 என்றிருப்பதை முறையே ரூ 4—0—0 ஆகவும், ரூ 0—8—0 ஆகவும் திருத்தி வாசிக்குமாறு வேண்டுகிறேன் மேலும் ஷை நிதிக்கு வத்திராயிருப்பு ஸ்ரீமான் வே. மு. வேலாயுத நாடார், நமது மித்திரன் அதிபரிடம் சேரில் கொடுத்த ரூபாய் ஒன்றையும் பெற்றுக்கொண்டேன் என்று ஷை நிதியின் பொக்கிஷதார் ஸ்ரீமான் செ. ப. உலகநாத நாடார் எழுதுகிறார்.

---

## நமது சந்தா நேயர்கள் கவனிக்க வேண்டும்.

இவ்வருடம் நமது சந்தா நேயர்களுக்கு வி. பி. அனுப்பும்போது பழைய பத்திரிகையில்தான் வி. பி. யை அனுப்பிவைப்போம். ஆனால், பத்திரிகைமட்டும் நடப்பாக எப்போதும்போல் வந்து கொண்டு தானிருக்கும். நமதுசந்தாநேயர்கள் தங்களுடைய சௌகரியத்தையும், வீணாக ஏற்படும் தபால் செலவையும் உத்தேசித்தும், நமது சிரமத்தை உத்தேசித்தும் சந்தா தொகையை மணியாடர் மூலம் அனுப்பி வைத்தால், நலமாயிருப்பதோடு, ஆறு அணா விலை மதிப்புள்ள, ஒரு ரிப்போர்ட்டு புஸ்தகமும் இனாமாகக்கிடைக்கிறது என்பதையும் ஞாபகப் படுத்துகிறோம்.

நமக்கு கடிதமெழுதும் ஒவ்வொரு சந்தா நேயரும் தங்கள் சந்தா நம்பரை குறிப்பிட்டே கடிதமெழுதும்படி வேண்டுகிறோம். சந்தா நம்பரைக் குறிப்பிடாமல் எழுதப்படுமானால் பதில் கிடைக்க தாமதமேற்படும். பதில் தெரிய வேண்டுவோர் கண்டிப்பாய் ஸ்டாம்பு அனுப்பவேண்டும். இல்லாவிட்டால் பதில் கிடைப்பதரிதாகுமென்பதை ஞாபகப் படுத்துகிறோம்.

மானேஜர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## இதுதானு முன்னேற்றம் ?

சென்ற மாதம் வெளிவந்த பாண்டியகுல தீபம் பத்திரிகையில் திராவிடனில் K. T. மனவாள நாயுடு எழுதிய ஒரு வியாசத்தைக் கண்ணுற்றேன். ஸ்ரீமான் கே. டி. மனவாள நாயுடு அவர்கள் உலக நடையை அனுசரித்தும் கம்மவார் நாயக்கர்களுடைய நன்மையைக்கோரி நீண்டதோர் வியாசம் வரைந்திருப்பது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். ஒவ்வொரு சமூகத்தாரும் தங்கள் ஜாதி முன்னேற வேண்டி உடல் பொருள் ஆவிமூன்றையும் தத்தம் செய்து தீவிர முயற்சிக்கிறார்கள். ஆனால், கம்மவார்கள் நாடார்களிடம் கொடுக்கல் வாங்கல் கூடாது என்றும், நாங்கள் வசிக்கும் கிராமங்களில் கடைகள் முதலானது வைத்து நடத்தக் கூடாதென்றும் செய்து வருவது எனக்கே ஒருபுரம் வெட்கமும் ஒருபுரம்சந்தோஷமுமுண்டாகிறது. நம் காருண்யம் பொருந்திய பிரிட்டிஷ் ஆக்ஷியில் ஒவ்வொருசமூகத்தாரும் கக்ஷிபோட்டுக் கொண்டிருப்பது நன்மையல்ல.

இந்தியாவில், நேசக்கக்ஷி என்றும், தேசீயக்கக்ஷி என்றும், மிதவாதக்கக்ஷி என்றும், அமிதவாதக் கக்ஷி என்றும், திராவிடக்கக்ஷி என்றும், ஜஸ்டிஸ்கக்ஷி என்றும் ஒவ்வொரு கக்ஷிக்கு எதிர்கக்ஷி இருப்பதுபோல் இது ஒரு கக்ஷியேற்படுகிறதாகத் தெரிகிறது. ஆனால் எல்லா சமூகத்தாரும் ஒரேகக்ஷியில் இறங்கிப் பேசினால் கக்ஷியும் தாழ்ந்து போகும். எதிர்கக்ஷி இருப்பது நம்முன்னேற்றத்திற்கு பெரும் நன்மையென்று நினைக்கிறேன். ஆனால், அவர்கள் நாடார் மீது கொண்ட பொறாமையினாலும், வஞ்சகத்தால் செய்து வருவது நெருஞ்சி முள்ளுக் கொப்பாயிருக்கிறது. ஒரு சமூகத்தினரோடு மற்றொரு சமூகத்தினரும் சேர்ந்து ஒத்துழைத்தால் எந்தக் காரியமும் சீக்கிரம் சித்தியாகும். அப்படிக்கல்லாமல் எல்லாச் சரக்குகளையும் நம்மவர்களிடமே வாங்கி ஜீவிக்கிறார்கள். நாம் கட்டுப்படுத்திக் கொண்டால் அவர்களை முன்னேற வொட்டாமல் செய்துவிடலாமென்று, பச்சோந்தி எண்ணம் கொண்டால் என்னவாகும். இதுதான் கம்மவார்களின் முன்னேற்றம். ஸ்ரீமான் கே. டி. நாயுடுஅவர்கள் எழுதியபடி வியாபாரம், கைத்தொழில், கல்வி' விவசாயம் முதலிய வேலைகளில் முயற்சி எடுத்துக் கொண்டு உழைத்துவந்தால் மற்ற சமூகத்தார்களைப்போல் சீக்கிரம் முன்னேற்றமடைய ஏதுவாகும். அப்படிக்கல்லாமல் கிராமங்களில் சென்று சரக்குகள் கொடுக்கல்வாங்கல் செய்யக்கூடாது என்று பூர்சாண்டிவேஷம் போட்டுக் கொண்டு திரிந்தால், ஒரு சமூகத்தாரை முன்னேறவிடாமல் தடுத்து விடலாமென்று எண்ணம் கொள்கிறார்கள். ஆனால் தெய்வப்புலமைவாய்ந்த ஔவைப் பிராட்டியாரும் "இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதி விட்ட சிவனும் செத்து விட்டானோ? முட்டமுட்டப் பஞ்சமேயானாலும் பாரமவனுக் கன்னாய் நெஞ்சமே அஞ்சாது நீ" என்று திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்களல்லவா? அதைப்போல் நாமும் நம் நெஞ்சத்தை நம் தலைவர்கள் விடாமுயற்சிப்படி நடத்திக் கொண்டு சென்றால் நமது முன்னேற்றம் சீக்கிரம் கைகூடும். முயர்ச்சியுடையோர் இகழ்ச்சியடையாரென்னும்முதுமொழிக்கிணங்க நமது நாடார் மகாஜன சங்கத் தலைவர்கள் இட்டகட்டளையைச்சிரமேற்கொண்டுஅதின்படிநடந்துகொள்வார்களென மறுமுறையும் கேட்டுக் கொள்கிறேன்.

K. P. குமாரசாமி நாடார்,
சிவகாசி.

## பாடசாலையின் பரிதாப நிலைமை.

அருப்புக்கோட்டையிலுள்ள நமது பாடசாலை சின்னாட்களுக்கு முன் ஹைஸ்கூலாக கவர்ன்மென்டாரால் அங்கீகரிக்கப்பட்ட விஷயம் யாவரும் அறிந்ததே. அதனுடைய நடவடிக்கைகளை கவனித்தவர்கள் அவ்வூரில் சிலர் என்பது மிகையாகாது. பாடசாலையில் மானேஜிங் கமிட்டி மீட்டிங்குகள் வாராந்தரமோ! மாதாந்தரமோ! அல்லது வருஷாந்தரமோஎன்பது எங்கும் நிறைந்த பரம்பொருளுக்குத்தான் தெரியும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

இன்னும் மீட்டிங்குகள் யான் கவனித்த வரையில் பகலிலாவது இரவிலாவது நடப்பதாகத் தெரியவில்லை. மீட்டிங் கூடுகிற நேரம் பகலுமாயிருக்க முடியாது. ஏனெனில் அச்சமயங்களில் நடந்தால் யாருக்காவது தெரிந்திருக்கும். ஆயினும் மானேஜரும் டை கமிட்டி மெம்பர்களும் அதை இரகசியமாக நடத்துகிறார்களோ என்பதும் புலப்படவில்லை. நான் டை மீட்டிங்குகள் நடந்த சமயங்களை கவனிக்காமல் இருந்திருப்பேனாயினும், பெரியோர்கள் இதைக் குற்றமாக எண்ணாமல் அடுத்த பதிப்பில் நங்குல மித்திரன் மூலமாக எத்தனை மீட்டிங்குகள் இவ்வருஷத்தில் கூடியிருக்கிறார்கள் என்று தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன். ஹைஸ்கூலின் நிர்வாகிகளே! தாங்கள் பாடசாலையைக் கவனித்திருக்க மாட்டீர்கள் என்று சொல்லவும் வேண்டுமோ.

கமிட்டி மெம்பர்களே !

நீங்கள் ஒவ்வொரு வருஷ இன்ஸ்பெக்ஷன் ரிப்போர்ட்டை கவனியாமல் இருக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன். தாங்கள் ஒரு வருஷமும்இன்ஸ்பெக்டரால் குற்றம் (குறைவு) என்று சொல்லப்பட்ட காரியத்தை மறுவருஷத்திலும் டைகுறை யிருக்கும்படியாக விட்டுவிட்டு கவனியாமலிருப்பதை நினைக்க நினைக்க மனம் கலக்க மடைகிறது. நம்முடைய க்ஷத்திரிய வீரமும் நிர்வாக மேன்மையும் எங்கு சென்றனவோ? கால மாறுபாட்டாலும் கலியுகக் கொடுமையாலும் டை குணங்கள் நம்மைவிட்டு அகன்றனவோ! ஆயினும் இதை பொது ஜனங்கள் கவனியாமல் இருப்பது மிக்க விசனிக்கத்தக்கதே.

பொது ஜனங்களாகிய நாம்தானே, டை மானேஜரையும் கமிட்டி மெம்பர்களையும் தேர்ந்தெடுத்தோம். அவர்களை நாம் ஏன் கேட்கக்கூடாது? பொது ஜனங்களாகிய நம்மைத் திருப்திப்படுத்தாமல், அவர்கள், தாங்கள் ஸ்தானங்களை வகிக்க முடியாதென்பது யாவருமறிந்ததே. இப்படியிருக்க நாம் அவர்களுக்குப் பயந்துகொண்டு கேட்காமலிருப்பது க்ஷத்திரிய தர்மமா? பத்து லக்ஷம் ஜனத்தொகையுள்ள நங்குல முன்னேற்றத்துக்காக உழைத்து வரும் நான்கு பத்திரிகைகளில் ஒன்றாகிய நாடார் குலமித்திரன் நடந்து வரும் திருநல்லூர் வாசிகளே! நீங்கள் தேர்ந்தெடுத்து உங்களுக்குப் பிரதிநிதியாக அனுப்பிய கமிட்டி மெம்பர்கள் இவ்வளவு சுருசுருப்பாய் வேலைபார்ப்பது நமது பாக்கியந்தானோ! அல்லது முன் ஏற்பட்ட சாபமோ! தெரியவில்லை.

கான்பரன்ஸ்தோறும் தவறாது சட்டை தொப்பியுடன் பிரசங்கமேடையின் மேல் நின்று கல்வி முக்கியம் என்று பன்முறைபேசும் குலாபிமானிகளே! இனிமேலாவது நங்குல ஹைஸ்கூல் ஆறிலொன்றாகிய அருப்புக்கோட்டைஹைஸ்கூலின் நிர்வாகம் எப்படி இருக்கிறதென்று கவனிப்பீர்களா?

சிறியோனாகிய நான், சொன்னதை குற்றமாகவும், பாட்டேரும் குலாபிமானிகளிடத்தில் குற்றங் கண்டுபிடித்ததாக எண்ணாமலிருக்கும்படி வேண்டுகிறேன்.

E. A. நடராஜன்
கல்லூரி மாணவன்.

## அந்நிய நாட்டுச் சமாச்சாரம்.

### இடியினால் வெடி.

இத்தாலியிலுள்ள ஒரு வெடிமருந்துச் சாலையில் ஒரு இடிவிழுந்த தன்பலனாக வெடி விபத்துண்டாகி சுற்றுப் பக்கங்களிலுள்ள பலகிராமங்களும் வீடுகளும் பாழாகிவிட்டன. சுமார் 100பேர்வரையில் கொல்லப்பட்டும் 300 பேர்வரை காயமடைந்து மிருக்கின்றனராம்.

* * *

### கமால் பாஷாவின் ராணுவ பலம்.

100000 குதிரை வீரர்கள்சைனியங்களுடன் கமால் பாஷாவின் வசமிருப்பதாக சமீபத்தில் கிடைத்த மதிப்புத் திட்டம் கூறுகின்றது. இவை 7 பட்டாளங்களாக பிரிக்கப் பட்டிருக்கின்றன. இவைகள் தவிர கமாலிடம் 60 ஆகாய விமானங்களு மிருக்கின்றனவாம்.

* * *

### யுத்த கப்பல்

'ராமிலேஸ்' என்ற மிகப் பெரிய யுத்தக் கப்பல் இன்று மால்டாவிற்கு வந்து சேர்ந்தது. இதில் 15அங்குல பீரங்கிகள் இருக்கின்றன. இது மத்திய தரைக் கடலிலுள்ள கப்பற் படையின் உதவிக்காக வந்திருக்கின்றது.

* * *

### மதுவிலக்கு·

கமாலியர் தாங்கள் கைப்பற்றியிருக்கும் கொண்ட இடங்களிலுள்ள மதுபானக் கடைகளை யெல்லாம் பறிமுதல் செய்து விட்டனர். அவர்கள் கள்ளுக் கடைகளை யெல்லாம் மூடிவிட்டார்கள்.

லேள.

* * *

### ஜர்மானிய ஆகாயப்படைத் தலைவரின் மரணம்.

1916-ம் வருட முதல் ஜர்மானிய ஆகாயப் படையின் தலைவராக விருந்து வரும் இங்கிலாந்தை ஜர்மன் ஆகாயப் படைகள் தாக்கியதற்கு உத்திரவாதமான ஜனரல் வான்ஹாப்னர் என்பவர் மரண மடைந்து விட்டாராம்.

* * *

### டேலிபோன்கள்.

இங்கிலாந்தில் மொத்தம் 975 டெலிபோன்களிருக்கின்றன. இதற்காக 150 இலட்சம் பவுன் செலவாகிறது. இங்கிலாந்திலுள்ளசெப்பனிடப்பட்டபாட்டையின் நீளம் 15: 0692 மைல்கள்.

* * *

### மோட்டார் இரதங்கள்.

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் சவாரிசெய்யும் மோட்டார் இரதங்கள் 90 இலட்சமும் சாமான் ஏற்றும், மோட்டார்வண்டிகள் 19 இலட்சமும்இருக்கின்றன.

* * *

### வார்த்தைக்கு ஒரு பவுன்,

இங்கிலாந்தின் பிரதம மந்திரியான லாயிட்ஜார் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதில் 1, 50,000 வார்த்தைகள் அடங்கியிருக்கலாம். அதனை இங்கிலாந்தில் பிரசுரிப்பதற்காக ஒரு புஸ்தக வியாபார சங்கத்தார் 90,000 பவுன் கொடுக்கப்போகிறார். இன்னும் அப்புத்தகத்தை மற்ற நாடுகளில் வெளியிடுவதற்குரிய தொகையையும் சேர்த்தால் லட்சம் பவுனுக்கு மேலாய்விடும் எனவே, லாயிட் ஜார்ஜ் எழுதிய அவரது மந்திரி கதைக்கு வார்த்தைக்கு ஒரு பவுன் வீதம் விலையாகிறது. தமிழ் நாட்டில் ஆசிரியர்கள் தாங்கள் எழுதும் ஒரு புத்தகம் முழுமையையுமே ஒரு பவுனுக்கு விற்றுவிடுகிறார்கள்!

* * *

### உணவிற்காகச் சிறுமிகளை விற்றல்.

சீனாவில் மேற்குப் பாகத்தில் அன்ஹுவி என்ற மாகாணத்தில் பஞ்சமிருப்பதால் ஜனங்கள் மிகுந்த கஷ்டப்பட்டு வருகின்றனர். அங்கு உணவிற்காகப் பெண்களை விற்று வருகிறார்களாம். இவ்வருஷ முடிவிற்குள் பஞ்சத்தால் அங்குள்ள 3-லட்சம் ஜனங்களில் பெரும் பாலோர் இறந்தோ அல்லது நாய்களால் புசிக்கப்பட்டோபோய்விடுவார்களாம்.

## பிரதமக் கல்வி.

(திராவிடனில் ஸ்ரீமான் ஆர். ஜி. கல்லகுற்றாலம் பிள்ளை எழுதுகிறார்.)

இந்த ஜில்லாவில் மறவர்கள், நாயக்கர்கள், செட்டிகள், நாடார்கள், ஆதிதிராவிடர்கள் இவர்களே முக்கிய ஜாதிகளாக இருக்கிறார்கள். இவர்களில் நாடார்கள் மற்ற ஜாதியார்களைக் காட்டிலும் படிப்பில்முன்னேற்றமடைந்தவர்களென்றாலும் நாடார்கள்வீடுகள் சுருக்கமாக உள்ளதும், பள்ளிக்கூடமே இல்லாததுமான கிராமங்கள் பல இருக்கலாம் அவர்களில் (பனைவிவசாயிகள்) பனையேறிகள் வியாபாரிகள் என்று இரு வகுப்பார்களிருப்பதில், பிந்திய வகுப்பார்களின் பிள்ளைகளுக்கு செட்டிவட்டி, வட்டிக்கு வட்டி. இலாப நஷ்டக் கணக்குகள் பார்க்கவும், உலகத்தின் மற்றும் பல பாகங்களிலும் நமது தேசத்திலும் கையாடி வருகின்ற வியாபார முறைகளும் இவைகுவாய்ச் சொல்லிவைக்க வேண்டியதாகும். நாயக்கர்கள் செட்டிகள் இவர்களுக்குள் புதிதாய் உண்டாயிருக்கும் கிளர்ச்சியிலிருந்து சில இடங்களில் புதிதாய்ப் பள்ளிக்கூடங்களும், எந்த இடத்திலும் முன்னிலும் அதிகமாய் அவர்கள் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போவதும் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் அனேகமாய் சஞ்சாரிகளாக இருப்பதால், அவர்கள் பிள்ளைகளுக்கு மற்ற எந்தப்பாடத்தைக் காட்டிலும் விவசாயத்தைப்பற்றி அதிகமாய் சொல்லிவைக்க வேண்டியது அவசியம். அவர்கள் தங்கள் சரித்திரத்தையும் பூர்வீகத்தையும் ஞானிகளையும் மற்றும் பெரியோர்களையும் அறிதற்கு சௌகரியமாக அவர்கள் பிள்ளைகளுக்குத் தாய்பாஷையாகிய தெலுங்கும் பசாலவி வைக்க வேண்டியது அவசியம். மறவர்கள் படிப்பைப் பற்றி ஜில்லா பூராவும் கவனித்து அவர்களுக்கு பகல் பள்ளிக்கூடங்கள் இராப் பள்ளிக்கூடங்கள் முதலியன வேண்டியிருக்கும் இடங்களை சுட்டி ஒரு ரிப்போர்ட்டு செய்யும்படி ஜில்லா கல்விச் சங்கம் என்னைக்கேட்டிருக்கிறது. ஜில்லாக் கல்விச்சங்கத்தின் அனுமதி கிடைக்குமென்ற எண்ணத்துடன் ஆதிதிராவிடர்களுக்கு வேண்டியிருக்கும் கல்வி சௌகரியங்களையும் கவனிக்க ஆரம்பித்திருக்கிறேன். வேண்டிய தகவல்கள் மற்ற ஜாதித் தலைவர்கள் கொடுப்பார்களானால் அவர்கள் ஜாதி சம்பந்தமாகவும் வேண்டும் முயற்சி யெடுத்துக்கொள்ள சித்தமாயிருக்கிறேன். மறவர்களுடையவும் ஆதிதிராவிடர்களுடையவும் படிப்பு விஷயங்களைக் கவனிக்கக்கேள்விஜாப்தா ஒன்று தயாரித்துக் கொண்டிருக்கிறேன். நாயக்கர் செட்டிகளுக்காக கேள்விஜாப்தா தயாரிக்கவும் சித்தமாயிருக்கிறேன். அவசியமானால் நாடார்களுக்காகவும் தயாரிக்கத் தயாராயிருக்கிறேன். நான் கவனிக்க எடுத்துக் கொண்டிருக்கும் விஷயங்கள் பெரிய விஷயங்களாதலால் அவைகள் விஷயத்தில் எல்லாருடைய உதவியையும்ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்.

## நேசதேசக் கடனும் அமெரிக்கரது கடமையும்.

8-10-22-யில் அமெரிக்க பாங்கர்களது மகா நாட்டில் 1000 பிரதிநிதிகளின் முன்பு பிரபல அமெரிக்க பாங்கரான மிஸ்டர் லாமாண்ட் பேசிய பொழுது பின்வருமாறு கூறினாராம் "அமெரிக்காவிலுஞ் சரி, ஐரோப்பாவிலுஞ் சரி, நேயதேசங்கள் தங்களுள் ஒன்றுக்கொன்று கொடுத்துக் கொள்ள வேண்டிய கடன் விஷயமே நஷ்டஈடு விஷயத்தைக் காட்டிலும் ஜனங்களது கவனத்தைக் கவர்ந்து விட்டது. வெர்சேலஸ் உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நஷ்ட ஈட்டுத் தொகையை ஜெர்மனி கொடுக்கவும் முடியாது. அது கொடுக்கப் போவதில்லை. நம்மை நாமே முட்டாள்களாகச் செய்து கொள்ளாமலிருப்பதற்காக நம்மால் வசூலிக்கமுடியாததாயும் நேசதேசங்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாயும் இருக்கும் கடன் தொகையை இவ்வளவென்று நிர்ணயிக்குமாறு அமெரிக்கர்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்."

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தலைக்கட்டுவரி.

(மதுரை நாடார் வழியப்பிரசார சபை)

அன்பிற்சிறந்த ஐயன்மீர்!

நாடார் குலத்தில் பிறந்த நாம் ஒவ்வொருவரும் நமது மஹாஜன சங்கத்தில் கூடித் தீர்மானித்த பிரகாரம் நம் தாய்ச்சங்கத்திற்கு தலைக்கட்டு வரியாக தலைக்கட்டொன்றுக்கு ரூ 1—0—0 வீதம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோமென்பது நம்மில் யாவருமறிந்த விஷயமாக இருந்தும் நாங்கள் அவ்விஷயத்தை உங்களுக்குக் கூறப்புகுந்ததின் காரணம் யாதெனில், இவ்விஷயமானது நம்மால் தீர்மானிக்கப்பட்டு அநேக வருஷங்களாகியும் இப்போது சிவகாசியில் கூடிய 8-வது மஹாநாட்டில் 2-வது நாள் 8-வது தீர்மானமாக "மதுரை திருமங்கலம், விருதுபட்டி, சிவகாசி, அருப்புக்கோட்டை முதலிய ஊர்களில் தலைக்கட்டுவரி வசூலாகாதிருப்பது மற்ற ஊர்களில் வரிவசூலையதற்குத் தடையாக இருப்பதால் அவ்வூர் சீக்கிரத்தில் தலைக்கட்டு வரி வசூல் செய்ய இம்மஹாநாடு கேட்டுக் கொள்கிறது" என்று ஸ்ரீமான் P, பழனிவேல் நாடார் B, A, அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான் தி. ஆ தி. ப. அ, பழனிக்குமார் நாடார் அவர்களால் ஆதரிக்கப்பெற்று ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டி நேர்ந்ததை நிவர்த்தி செய்யும் நோக்கத்தை முன்னிட்டே.

கண்ணிய சீலர்காள்!

நாடார் குலத்தில் நாம் பிறந்தது நமது ஜனசமூக முன்னேற்றத்திற்கும் நமது தாய்ச் சங்கத்தில் நாம் ஐக்கியப் பட்டவர்கள் என்பதை வெளிக் காட்டுவதற்கும் நமக்குள் ஐக்கியத்தைப் பெருக்குவதற்கும் நமது முன்னேற்றத்திற்கு அஸ்திவாரமான மகிமை பொருந்திய தலைக்கட்டுவரியை நாம இன்னும் கொடுக்காதிருப்பதும், அதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியார்கள் அவ்விஷயமாய் சிரத்தை கொண்டு எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்காது சும்மாயிருப்பதும் நமது க்ஷத்திரியகுல தர்மமாகுமா?

மேலும் நமது குல முன்னேற்றத்திற்கு கல்வி எத்தனை அவசியமானதென்பது உங்களுக்கு நன்றாய்த் தெரியும். சிவகாசி மகாநாட்டில் 2-வது நாள் 9-வது தீர்மானமாக "தலைக்கட்டுவரி வசூல் வழியாய் சங்கத்துக்கு வரும் பணங்கள் சங்கத்தால் கல்வி விஷயமாய் மாத்திரம் செலவு செய்ய வேண்டுமென்று இம்மஹாநாடு கேட்டுக் கொள்கிறது" என்று ஏகமனதாய் நிறைவேறிய தீர்மானத்தை நீங்கள் நன்கறிந்திருப்பதால் சீக்கிரமாக உங்கள் கடமையைச் செய்ய முன்வருவதே உங்களுக்கு விசேஷப்பெருமையை உண்டாக்கும்.

பொதுநலங்கருதும் புண்ணியவான்களே!

நமது ஜன சமூக முன்னேற்றத்திற்கு அஸ்திவாரமானதும் நம்மைப் புனிதப்படுத்தக் கூடியதும் நாம் இழந்த கௌரவத்தை நமக்கு மீண்டுமளிக்கக்கூடிய வல்லமையுள்ளதும், நம்குல ஏழை மாணவர்களுக்குக்கல்வியைப் புகட்டிக்கரையேற்ற, கங்கணங்கட்டி நிற்பதும் இத்தலைக்கட்டு வரியே. ஆதலால் இதை வசூலிப்பதற்கென்று ஒவ்வொரு ஊர்களிலும் நியமிக்கப்பட்ட கனவான்கள் உடனே புறப்பட்டு தலைக்கட்டுவரி வசூல் செய்து

## தற்கால விவசாய நிலைமை.

("இந்திய விவசாயத்தில்" ஒரு நிருபர் எழுதும் சாரம் பின்வருமாறு.)

கடல் சூழ்ந்த இவ்வுலகின் கண் சமஸ்த ஜீவராசிகளும் உயிர் பெற்று வாழ இன்றியமையாதது விவசாயமே. விவசாய மில்லாவிடில் இவ்வுலகமே இல்லை என்னலாம். விவசாயத்துக்கு முக்கிய ஆதாரமாகிய நிலவளம் பொருந்திய இந்நாட்டில் ஆங்காங்கு பல இடங்கள் பாழ்தரிசாய்க் கிடக்கிறதையும் பயிர் செய்யப்பட்ட நிலங்களிலுள்ள மகசூல்கள் ரொம்பவும் கேவலஸ்திதியிலிருப்பதையும் ரயில்வேலண்டி முதலானதுகளில் நாம் பிரயாணஞ் செய்யும்போது வழி நெடுக அடிக்கடி பார்க்கிறோம். சிற்சில இடங்களில் நல்ல பக்குவத்துடன், முறைப்படி பயிர் செய்து பெரும் லாபம் அடைந்து வருகிறதையும் பார்த்து வருகிறோம். பொருள் வருவாய்க்கு முக்கிய காரணமாயுள்ள விவசாயம் நம் நாட்டில் வரவர கேவல ஸ்திதி அடைந்துவரும் காரணத்தைக் கவனிப்போமானால் பெரும் பூஸ்திதியுடைய அநேக மிராஸ்தார்களின் அசட்டைதானென்று தெளிவாகிறது. விவசாயத்தில் லாபமில்லை, வேறு விதத்தில் நல்ல மதிப்பும், லாபமுமடையலாமென்று பெரும் பணச்செலவு செய்து சாஸ்திரியாகப் படித்து தம் முன்னோர்கள் தேடிவைத்த அருமையான நிலங்களை ஏழைக் குடியானவனிடம் பங்குக்கோ, பாட்டத்துக்கோ அடைத்துவிட்டு அடிமைத் தொழிலான உத்தியோகத்தில் பிரவேசிப்பது சரியாகாது, இன்னுஞ் சில மிராசுதார்கள். முழுச்சோம்பேரிகளாகி தம் நிலங்கள் இன்ன இடத்திலதானிருக்கிறதென்று முதலாய் தெரியாமல் இருக்கிறார்கள், பெரும் பூஸ்திதியுடைய பண்ணையார்களின் யோக்கியதை இவ்வாறிருந்தால் எங்ஙனம் விவசாயம் விருத்தியடையுமென்று சொல்லத் தேவை இல்லை. ஐரோப்பா தேசத்திலுள்ள அன்னியர் இந்நாட்டில் வந்து காடுகளை வெட்டி திருத்தி காப்பி தேயிலை முதலிய பயிர்களைப் பயிரிட்டு கனலாபமடைகிறதை நாம் கண்ணால் பார்த்திருந்தும், நம் நாட்டிலுள்ள நமது நிலங்களை செழிப்பிக்கா விட்டால் நம்மைப்போல் மதியீனர்களெங்கேனுமுண்டோ? எத்தொழிலினும் விவசாயமே சிறந்ததாயிருப்பதால் பெரும் பூஸ்திதியுடைய செல்வர்களே! நம் முன்னோர்கள் கையாண்டுவந்த விவசாயத்தை விருத்திசெய்யப் பாருங்கள். தற்காலம் விவசாயத்துக்கு அனுகூலமான அநேக சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விவசாய கலாசாலைகளும் சோதனைப் பண்ணைகளும் பல இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டும் விவசாய பத்திரிகைகளும் வெளிவந்துலாவுகிறதாலும் நூதன முறைகளை அனுசரித்து விவசாயத்தை நம் நாட்டில் விர்த்தி செய்ய வேண்டியது ஒவ்வொரு மிராஸ்தாரின் கடமையாக யிருக்கிறது.

பாக்கிமை தங்கிய நமது நாடார் மஹாஜன சங்கத்துக்கு அனுப்பிக் குலாபிமானத்தை வெளிக் காட்டுமாறும், அக்கனவான்களையும் ஏனையோரையும் அன்புடன் வரவேற்று தலைக்கட்டுவரியைத் தவறாது கொடுக்குமாறுப் பணிவுடன் வேண்டுகிறோம்.

* * *

நாடார் என்னும் சோல ஆராய்ச்சி என்னும் நூலை அரங்கேற்ற சிவகாசியில் கூடிய நம் 8-வது மகா நாட்டில், செ. ப. உலகநாதநாடார், அ பெ. இரத்தினவேலு நாடார், மா சி. ச பாண்டிய நாடார், வ. உ. பாஸ்கரபாண்டிய நாடார் முதலானவர்களின் நன்முயற்சியால் வசூலித்த நன்கொடை விபரம்

| | முன் தொடர்ச்சி. | ரூ அணை பை. |
|---|---|---|
| முதுகுளத்தூர், | மு வேல் நாடார் | 0—3—0 |
| மதுரை தெற்குவாசல், | சு மா சுப்பிரமணிய நாடார் | 1—0—0 |
| மதுரை | பூ சி ச சின்னைய நாடார் | 1—0—0 |
| ஷை யூர் | வ அ ஏம நாடார் | 1—0—0 |
| ஷை யூர் | கா ஆண்டியப்ப நாடார் | 2—0—0 |
| கல்லடக்குறிச்சி | பெ மனோன்மணி நாடார் | 1—0—0 |
| அருப்புக்கோட்டை, | புளி சிவ செட்டி நாடார் | 0—4—0 |
| ,, | பூ சாமாசுந்தர நாடார் | 0—4—0 |
| திருநெல்வேலிப்பாலம் | மு இராமய்யா நாடார் | 0—4—0 |
| தூத்துக்குடி, | P சங்கரலிங்க நாடார் | 0—8—0 |
| ,, | தெ சின்னக்காளை நாடார் | 0—8—0 |
| ,, | ஆ பெரியசாமி நாடார் | 0—8—0 |
| செங்குன்றபுரம், | அ ம அருணாசல நாடார் | 0—4—0 |
| ,, | வே பால்வண்ண நாடார் | 0—4—0 |
| சிவகாசி | கா ச சின்னக்கண்ணு நாடார் | 0—4—0 |
| மதவநாயக்கனூர், | சி ரா பழனிச்சாமி நாடார் | 0—4—0 |
| முத்துலாபுரம், | வீ ப நல்லகருப்ப நாடார் | 0—8—0 |
| ,, | பெரியகருப்ப நாடார் | 0—4—0 |
| சிவகாசி | பா செ இராமசாமி நாடார் | 2—0—0 |
| அருப்புக்கோட்டை, | மு வயிரமுத்து நாடார் | 0—8—0 |
| சாத்தூர், | சில அ சிதம்பர நாடார் | 1—8—0 |
| ஷை பூச்சக்கரைபட்டி. | சி ச வள்ளிமுத்து நாடார் | 1—0—0 |
| சாத்தூர், | இராமலிங்க நாடார் | 1—0—0 |
| ,, | பதினொரு மளிகை கனவான்கள்மூலம் | 4—0—0 |
| | சில்லரை நன்கொடை | 0—8—5 |


வெளிவருகிறது! வெளிவருகிறது!

### மனோ சுந்தரம்.

அருமையான தமிழ் நாவல்!

மாவிடுபெண்ணை, ஸ்ரீமான் ஏ இராஜநாயகம் நாடார் எழுதியது.. மெய்க்காதலை விளக்குவது. மாதர்களுக்கும். மற்றவர்களுக்கும் உயர்ந்த நீதியைப் போதிப்பது, சொற்சுவை பொருள்சுவை ததும்பிநிற்பது: பத்திராதிபர்களாலும், சிறந்த தமிழ் வித்துவான்களாலும் நன்கு மதிக்கப்பட்டது. உயர்ந்த கடிதத்தில்; சுத்தமான பதிப்பு 200 பக்கத்துக்கு மேற்பட்டது: விலை ரூ 1

விலாசம். மானேஜர்,

பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸ்,

பாளையங்கோட்டை.


நமது மித்திரன்

### போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு முனிசிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்.

அருப்புக்கோட்டை முதலாளி ஸ்ரீமான் மு மு. முத்துக் குமாரசாமி நாடார்.

சென்னை. நீலநூல் வியாபாரம், நாட்டாண்மை ஸ்ரீமான் கா. ஆறுமுக நாடார்.

சென்னை "விநோத விகடன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ஆ. ப. வை. கோதண்டராம பாண்டியநாடார்.

திருநெல்வேலி, முனிஸிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் அரி. அ. செண்பக நாடார்.

திருநெல்வேலி ஜில்லா மானூடு தண்டுப்பத்து, மிராஸ்தார் ஸ்ரீமான் சோ செல்லத்துரை நாடார்


### நாடார் நண்பன்.

திருவிதாங்கூர் நாடார்கள் குலவிருத்தியை நாடி வெளிவரும் ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை இதில் கல்வி கைத்தொழில், கிருஷி, நாட்டுச் சமாச்சாரங்கள் குலச்சரித்திரம் நாடார் சமாஜங்களின் நடபடிக்கை முதலிய நாடார்களுக்கு இன்றியமையாததும் அறியவேண்டிய விஷயங்களும் எழுதப்படும். ஆகையால் எல்லா குலாபிமானிகளும் இந்தப் பத்திரிகையை வாங்கி வாசித்து நாடார் குலத்தை விருத்திபண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

சந்தா விபரம்.

திருவிதாங்கூருக்குள் அஞ்சல் கூலி உள்பட வருடம் 1-க்கு ரூ 1-0-0

வெளிநாடுகளுக்கு தபாற்கூலி உள்பட வருடம் 1-க்கு ரூ 1-4-0

விலாசம்:—

வி. இராஜய்யா நாடார்,

புரொப்ரைட்டர் & பப்ளிஷர்

"நாடார் நண்பன்" ஆபீஸ்

நெய்யாற்றின்கரைதென் திருவிதாங்கூர்

### விநோத விகடன்.

மாதம் இருமுறைப் பதிப்பு பட்சுத் தொருவிசை டிம்மிசயிசில் வெளிவரும்

இதில் தன் பெயருக்கேற்ப விநோத விகடவியாசங்களும், உள்ளூர்,வெளியூர் வர்த்தமானங்களும், தந்தி பந்திகளும், கோர்ட் வர்த்தமானங்களும்,நீதி நல்லொழுக்கம், ஆசாரம்முதலிய விஷயங்களும் குலக்குறிப்புகளும் இன்னும் இதரவிஷயங்களும் வெளியாகின்றது.

உடனே கீழ்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இதன் வருடசந்தா உள்ளூருக்குரூ0-3-0

பினாங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வருடச்சந்தா ரூ 4 0 0

ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார். பத்திராதிபர்,

நெ. 33, நரசய்யர் வீதி,

பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை.


Tamil Heritage Foundation International Digital Library EBook collection

அறிவுடை நண்பர்கட்கோர் அன்பான ஓர் விண்ணப்பம்.

இழந்துபோன பலத்தை ஒரேவேளை லேகியம் சாப்பிட 1-மணி நேரத்தில் கொடுக்கும், துரையே கவனியுங்கள்.

மெடல் பெற்ற

## ஹார்க்குருவி சத்தின் "லேகியம்"

இந்த லேகியபாகம் மற்றோர் செய்து கொடுத்தால் ரூபாய் 1000 இனும்.

வெண்பா.

ஹார்க்குருவி சத்தெடுத்து உன்னதமாய்ச்செய்த இந்தச்
சீர்கொண்ட லேகியத்தைத் தின்றவர்கள் பேர்கொண்ட
சிங்கம்போல்வீரஞ் சிறந்தாண்மை தத்துவராய்
மங்கையுடன் வாழ்வார் மகிழ்ந்து.

☞ இந்த லேகியம் ஒவ்வொரு புருஷர்களும் பரிக்ஷித்து சந்தோஷமடைவீர்களாக. தத்தம் துர்செயலால் ஜீவரத்தினமாகிய இந்திரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் கெடுதிகளை நீக்குவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிது. இந்திரியநஷ்டம் இந்திரிய நீப்பு சீ கிரஸ்கலிதம் சித்திரை ஸ்கலிதம் ஆண்குறி சோர்வு ஏழுவகை தாதுக்களின் பலஹீனம் அஸ்தி வெட்டை சூடு நாம்பு தளர்ச்சி சதா இடுப்புவலி மலச்சிக்கல் பசி மந்தம் பித்தாதிக்க உஷ்ணவாய்வு கிருமி ரோகம் துர்நீர் வியாதிகள் தேகத்தில் ஒடித்திரியும் பலவித வாயுரோகம் பாரிசு வாய்வு நெஞ்சுவலி கிரைவாதம் கைகால் அசதி மயக்கம் மறதி முதலியன நிவர்த்தியாகும். சிங்கமிய ஆண்தத்துவத்தை யுண்டாக்கி இந்திரியத்தை மணிபோல்கட்டி போக இன்பத்தை கொடுக்கும் இந்த ஹார்க்குருவி சத்தின் லேகியம் குணமில்லை என்று சத்தியமாய்ச் சொன்னால் ரூபாய் 500 இனும் கொடுக்கப்படும்.

40 நாள் 16 பலம் டப்பி 1-க்கு ரூபாய் 10—0—0 20 நாள் 8-பலம் டப்பி 1-க்கு ரூ 5—0—0 12-நாள் 5 பலம் டப்பி 1,க்கு ரூபாய் 3—0—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மருந்து உபயோகிக்கும் விபர நோட்டீஸ் மருந்துடன் அனுப்பப்படும்.

பினங்கு. சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரா முதலிய பிரதேச வாசகர்கள் மருந்தின் கிரயமும் தபால்சார்ஜ் ரூ2-8.0 யும் சேர்த்து முன்பணம் அனுப்பி மருந்து பெறவேண்டும். மேற்படி ஊரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்களை அங்கிகரிக்கப் படமாட்டாது. தங்கள் விலாசம் தெளிவாய் எழுதவும். வியாபாரிகளுக்கு 100-க்கு ரூபா பத்து விதம் கமிஷன் கொடுக்கப்படும்.

☞ எமது விலாசம்:—

எம். ஏ. மரைக்காயன் அண்டு கம்பெனி,
ஆயுர்வேத வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

☞ எமது சிலோன் ஏஜண்டுகள்.
போ செல்லையா செட்டியார்,
கொபண்டரி வத்தை, நாவலாப்பிட்டியா போஸ்டு, சிலோன்.

## நோட்டீஸ்.

கொல்லம் கொச்சபிலாமூட்டில் எங்கள் கம்பெனிக்குச் சேர்ந்த ஸாமில் டிப்போவில் ஸ்டாக்கு செய்யப்பட்டிருக்கும் தேக்கும் மற்றுமுள்ள பலஜாதி தடிகளும், அறுப்புசாமிசுகளும், நாளது ஜூலைமாதம் 15உ (1097ளு ஆனிமீ 31உ) முதல் சனிக்கிழமைகள் தோறும் மேல்குறிப்பிட்டிருக்கிற இடத்தில் வைத்து பகல் 3-மணி முதல் எலம்போடப்படும் எலத்தில் கேட்க இஷ்டமுள்ளவர்கள் எலம் கேட்குமுன் 10 (பத்து) ரூபாய் டேமணி கட்டவேண்டும். எலமெடுத்தவர்கள் டி எலம் முடிவானவுடன் எலத்துகையில் பாதி கட்டவேண்டும். பாக்கித்துகையை எலம் ஸ்திரமான தேதிமுதல் ஒருமாதத்திற்குள் கட்டவேண்டியது. மற்றும் வேண்டிய விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்,

தாமஸ் ஸ்டீபன் கம்பெனி லிமிடெட்,
கொல்லம்.

## நாடார் பாங்கு லிமிடெட் தூத்துக்குடி,

கரண்ட் பிக்ஸட் டிபாஸிட், சேவிங்ஸ் பாங்க் கணக்குகள் வைக்கப்படும். வட்டி விபரம் மனு செய்து தெரிந்துகொள்ளலாம். சரியானசெக்யூரிட்டியின் பேரில் கடன்களும், ரொக்க கிரடிட்டும் கொடுக்கப்படும். எக்ஸ் சேஞ்சு தொழிலும் நடத்தப்படும்.



## நாடார் மகாஜனங்களே!

நமதுகுல முன்னேற்றத்திற்கும் தற்கால நாகரீக நவீனகத்திற்கும், நமது சிறுவர் சிறுமிகள் பலரும் வாசிப்பதற்கும், எக்காலத்தும் நம்குலப் பெருமையை எடுத்துப் பேசுவதற்கும், இன்றியமையாத ஓர் இந்திரவிமானம் போன்றதும் சென்னை ச சு சங்கரலிங்க நாடார் எழுதியதுமான

நாடார் மகாஜன சங்கச், சங்கீத மஞ்சரி

என்னும் புஸ்தகத்தை வாங்கி வாசித்து மனனந்த மெய்துங்கள் புஸ்தகம் 1-க்கு விலை அணு 0-4-0 மொத்தமாக ஐந்து புஸ்தகம் தருவித்தால் வி பி மூலம் அனுப்பப்படும் ஐந்தணு தபால் ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு புஸ்தகம் புக்போஸ்டில் அனுப்புவோம் உடனே எழுதுங்கள்,

விலாசம்.-

தி. மா. ஐயாவு நாடார்,
பட்டன் பாக்டெரி & ஜெனரல் மெர்சண்ட்
வண்ணாரப்பேட்டை, சென்னை.

# நாடார் பாங்கு

## லிமிடெட் தூத்துக்குடி,

## மூலதனம் ரூ 20,00,000

வாக்குறுதி செய்யப்பட்ட (SUBSCRIBED) மூலதனம்
(21-7-22 முடிய) ரூபா 360210
செலுத்தப்பட்ட மூலதனம்
(21-7-22-முடிய) ரூபா 167235

தூத்துக்குடியில் நடந்த ஆறுவது நாடார் கான்பரென்ஸின் தீர்மானத்தின்படி பாங்கு ஆரம்பித்து வேலை நடந்து வருகிறது. மூலதனம் ஜாஸ்தியிருக்கச்செய்தால் அதற்குத்தகுந்த லாபமிருக்கும் பங்கு எடுத்தவர்களுக்கும் அநுகூலமாயிருப்பதோடுகூட லாபத்தில் ஒருபாகம் நம் பொது நன்மைக்காக செலவிடப்படுமாதலால் நாடார்குலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கு ஏற்றவாறுகூடுதலான பங்குகள்எடுத்து இந்தப்பொதுக் காரியத்தை சித்திபெறச் செய்யவேண்டியது நம் கடமை. ஆகையால் காலதாமதம் பண்ணாமல் உடனே பாங்கில் பங்குகளுக்கு அப்ளிகேஷன் அனுப்புங்கள் வரவாற்றுப் பத்திரிகையும் அப்ளிகேஷன் பாரமும் கேட்பவர்களுக்கு உடனே அனுப்பிவிக்கப்படும்.

நீங்கள் ஒரு சந்தாதாரரா? இல்லையா? அப்படியாயின் சேருவதற்கு முந்துங்கள்.

## ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்.

பிரதிமாதமும் முதல் வாரத்திற்குள் தவறாமல் வெளிவரும் இப் பத்திரி பிறமத தூஷணை யின்றி, ஹிந்துமத விருத்தியையும், தேச சேவையையும் முக்ய நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

ஹிந்து மதத்திற்குப் புத்துயிர் அளித்த தவராஜ சிங்கமாகிய ஸ்ரீமத் ஸ்வாமி விவேகாநந்தர் நிறுவிய ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தாரால் நடத்தப்படுவது.

தமிழ், ஆங்கிலம் இவற்றில் வல்லுநராலும் உலகானுபவம் மிகப் பெற்றவர்களாலும் எழுதப்படும் விஷயங்களைக் கொண்டது.

உள்நாடு வருஷச் சந்தா ரூ 3-0-0 வெளிநாடு வருஷச் சந்தா, ரூ 4-0-0

மானேஜர், ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்,
மயிலாப்பூர், சென்னை.

## சிரரோகசேதனம்



இது காசியிலோர்பிரசித்திபெற்ற மஹானுபாவரால் ஜனங்களொவ்வொருவரும் அடிக்கடி தலைவலியால் படும் துன்பத்தை கஷ்டமின்றி க்ஷண நேரத்தில் நீக்கும் பொருட்டு உண்டுபண்ணப்பட்டது. இது தலைவலி, ஒற்றைத் தலைநோய், மண்டை குடைச்சல், மண்டை சளி, ஜலதோஷம், ஜன்னி, மண்டை காய்ச்சல், கண்ணில் மஞ்சள், கண்ணில் பீளைகட்டுவது கண் மப்பு, கண்ணில் சதை வளருதல் முதலியவைகளை நீக்கக்கூடியது. இதை முதலில் தலைவலிக்காரர்கள் உபயோகித்துப்பார்த்தால் அப்போது இதற்குள்ள சக்தியும் இதன் பெருமானமும் தெரியவரும். சமயத்திற்கு ரூபாய் 100 கொடுத்தாலும் தலைவலி துன்பத்தை உடனே நீக்குவதற்கு இது தவிர வேறில்லை இதன்விலை ஒரு செப்புக்கம்பி வி. பி. சார்ஜ் உள்பட புட்டி 1-க்கு ரூபாய் 1-0-0

எவ்வித தலைவலியாயினும் சரி இதனால் பலனில்லை, என்பவர்களுக்கு பணம் வாபீஸ் அனுப்புவோம். ஏஜண்டுகள் தேவை, தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

## ஆட்டோமாடிக்ஸ்பிரிங்பான்.

இவ்விசிறி அசல் நிக்கில் சில்வரினால் செய்யப்பட்டு அமெரிக்கா தேசத்திலின்றும் ஜர்மெனியினின்றும் புதிதாய் வரவழைக்கப்பட்டது. இது எலக்டிரிக் சக்தியினால் எப்படி சுற்றுமோ அவ்விதமே வில் விசையால் சுற்றக் கூடியது இதனால் எவ்வளவு காற்று தேவையானாலும் அடையக் கூடும்.



இவற்றைபடத்தில் காட்டியபிரகாரம் உபயோகிக்க வேண்டியது. ஒன்று மாதிரியாக வரவழைத்துப் பார்த்தால் அனைவரும் வாங்கக்கோருவார்கள். இதன் விலை நிக்கில்சில்வர் பான் ஒன்றுக்கு ரூபாய் 5-0-0 தந்தத்தினால் செய்யப்பட்டபான் ஒன்றுக்கு ரூபாய் 3-8-0 பார்வைக்கும் வெகு அழகாயிருக்கும்.

## வெகுஉயர்ந்த க்ஷவரக்கத்தி.

இவை ஒவ்வொருவரிடத்திலும் வேண்டியது அவசியம். இதனால் நாமேமுக க்ஷவரம் செய்து கொள்ளவும் பலபேருக்கு செய்த இதரகத்தியினால் செய்து கொள்வதால் சம்பவிக்கும் வியாதிகள் அதாவது படை, சிரங்கு முதலிய தொத்து வியாதிகள் ஏற்படாமலிருக்கும் பொருட்டு அம்பட்டனிடத் திவ்கத்தியைக் கொடுத்து கொள்ளலாம். தங்கள்



ஒருகத்தியை வரவழைத்துப் பார்த்தால் பின்புபலரையும் வாங்கச் செய்யும். திருப்தி இல்லாதவர்களுக்குப் பணம்வாபீஸ் செய்யப்படும்:

"கிரவுன் சுவோர்ட் ஹாலோகிரவுண்ட் ஜர்மன் ரேஜர் 1-க்கு ரூ 3-8-0.

"வயர் அண்டு சுவோர்ட் டி ஜர்மன் ரேஜர் 1-க்கு ரூ 3-0-0

சைமபோகர்டு ஹாலோகிரவுண்ட் ரேஜர் 1-க்கு 3-0-0

டி சாதா ரேஜர் 1-க்கு ரூ 2-0-0

மேற்கூறிய கத்திகள் ஒவ்வொன்றும் இரட்டைபாலிஷ்கத்திகள் புதிய ஸ்டாக்கு ஒரேதடவையில் 12 கத்திகள் வாங்குபவர்களுக்கு ஒரு கத்தி இனும் அனுப்பப்படும்.

விலாசம்.

மதருஸ் நேஷனல் சப்ளைகம்பெனி,
வண்ணாரப்பேட்டை மதருஸ்

## எட்டுமூலை லேடீஸ் ரிஸ்ட் லெட் கெடியாரங்கள்.

இக்கெடியாரங்களை பலபேரின் வேண்டுகோளின் பொருட்டு ஸ்பெஷலாக அமெரிக்காவிலிருந்து வரவழைத்திருக்கிறோம். வெகு உயர்ந்த, மீடனுமேகர் கெடியாரங்கள் ஒருவருஷம் தான் காரண்டி கொடுப்போம். ஒவ்வொன்றும் பிராஸ்லெட் செயினுடன் அனுப்பப்படும்.



அசல் நிக்கில் 8 மூலை கெடியாரம் 1-க்கு ரூபாய் 8-8-0

டி பொன் கில்ட் ரூபாய் 10-0 0

அசல் நிக்கில் ரவுண்டுகெடியாரம் 1-க்கு ரூபாய் 7-8-0

டிபொன் கில்ட் ரூ 9-0-0

விலாசம்.

விக்டீர் வாச்சு கம்பெனி,
வண்ணாரப்பேட்டை மதருஸ்

Printed and Published, By S. A. Muthu Nadar at Sri Muthumariamman Press Aruppukotta,

Tamil Heritage Foundation International Digital Library EBook collection